# ஆய்வுக்களஞ்சியம்

வரிசை 2

# திருச்செங்கோடு

2

கொடுமுடி சண்முகப் பிரகதம்

கொடுமுடி

சண்முகப் பிரகதம்

ஆய்வுக் களஞ்சியம்

# திருச்செங்கோடு-2

## செப்புப் பட்டயங்கள்

தேனோலை

11-ஆ, இரண்டாம் பெருஞ்சாலை

இந்திராநகர்

சென்னை-600020.

## BIBLIO DATA


| | |
|---|---|
| Title : | Aayvukkalanjiyam<br>Thiruchengodu-2<br>Copper Plates |
| Author : | Kodumudi Shanmuga Bragadham |
| Date of Brith : | 19-1-1947 |
| Language : | Tamil |
| Edition : | First, January 1980 |
| Paper used : | White Printing 14.4 kg. |
| Size : | Demmy 21.5 × 14 cm. |
| Printing point : | 10 point |
| No. of pages : | 4+56 |
| No. of Copies : | 1000 |
| Printer : | A. G. G. Printers, Indhira Nagar. |
| Binding : | Card Board |
| Price : | Rs 5/- |
| Publisher : | S. Bragadham<br>11-B, Second Avenue,<br>Indhira Nagar, Madras-20. |
| Subject : | Local History & Archeology<br>Thiruchengodu, Salam Dt. |
| Call No. : | V2 191 : 71 31 L 9 |
| Editorial Assistance : | P. Arthanareeswaran M.A., M.Phil. |

# அறிமுகம்

திருச்செங்கோடு பற்றிய செய்திகள் அனைத்தையும் தொகுத்து 'ஆய்வுக் களஞ்சியம் - திருச்செங்கோடு' என்ற பெயரில் 1979ம் ஆண்டு வைகாசி விசாகப் பெருவிழாவில் வெளியிட்டோம். மக்களிடையே அந்நூல் பெருமதிப்புடன் வரவேற்கப்பட்டது.

அதில் திருச்செங்கோடு பற்றிய செப்புப் பட்டயங்களின் குறிப்பு களை மட்டும் வெளியிட்டிருந்தோம். இடப்பற்றாக்குறை கருதி முழு வதையும் வெளியிட முடியவில்லை அக்குறையை ஈடுகட்டும் வகையில் தற்போது எல்லாப்பட்டயங்களையும் ஒன்றாகத் திரட்டி ஆய்வுக் குறிப்புகளோடு வெளியிட்டுள்ளோம்.

நமது பழைய பண்பாடும், வரலாறும், புதிய பெருமைகளுக்கு படியாக அமையும். நம்மை நாமே அறிவதன் முதல்நிலை இதுவாகும். இது தொடர்ந்து நிகழ வேண்டிய பணி திருச்செங்கோட்டு இளைஞர்கள் இப்பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளல் இன்றி யமையாதது.

கணப்பெருமக்கள் என்ற சொல் திருச்செங்கோட்டுக் கல்வெட்டு களில் புழங்கி வரும் சொல். கணம் - Set - ஒரு குழு என்று பொருள். ஒவ்வொரு பணிக்கும் தனித் தனிக் குழுக்கள் இருந்துள்ளன. அதே போன்று தற்காலத்திலும் பல குழுக்கள் தத்தமக்கு உகந்த பணிகளை ஆற்றி வருகின்றனர். கண்ணகி விழாக்குழு, சன்மார்க்க சங்கம், முருகனடியான் திருப்பணி மன்றம், வரலாற்றுப் பேரவை, போன்ற பல கணப்பெருமக்கள் உள்ளனர். தத்தம் கூட்டங்களில் திருச்செங்கோட்டின் பழைய வரலாற்றை மக்கட்கு உணர்த்தல் வேண்டும்.

திருச்செங்கோடு பற்றிய இலக்கியங்கள் பலவற்றைப் பட்டிய லிட்டு முதல் தொகுதியில் வெளியிட்டிருந்தோம். அவற்றில் அச்சாகாத நூல்கள் பல உள்ளன. திருச்செங்கோட்டுக் கணப் பெருமக்கள் முன்வந்து பதிப்புப் பணிகளில் பொருளுதவி ஆற்றிடல் வேண்டும்.

இந்நூல் உருவாதில் உதவிய அன்பர்களுக்கு நன்றிகூறக் கடப்பாடுடையோம். படித்துப் பயன்பெறும் நல்லோர் செங்கோடைக் குமரன் அருள் நோக்கில் எல்லா நலன்களையும் பெற்றுய்வர் என்பது எங்கள் எண்ணம்.

ச. பிரகதம்

பதிப்பாசிரியர்.



அர்த்தபாகம்

ஆய்வுக் களஞ்சியம்

# திருச்செங்கோடு-2

செப்புப் பட்டயங்கள்

குன்று தோறாடும் குமரப்பெருமானின் திருத்தலங்களில் கொங்கு நாட்டுத் திருச்செங்கோடு தனிச் சிறப்புடையதாகும். உமையொரு பாகனாருக்குத் தரையிலும் மலையிலும் கோயில்கள் உண்டு. இறைமைச் சிறப்புடன், வேளாண்மைச் சிறப்பும், துணிநெய்தற் தொழிற் சிறப்பும் தொன்று தொட்டுச் சிறந்து விளங்குகின்றன.

### ஆய்வுக் களஞ்சியம்

இப்புகழ் மிகு நகரத்தைப் பற்றிக் கிடைத்த எல்லாத் தகவல்களையும் ஒன்றாகத் திரட்டி ஆய்வுக்களஞ்சியம் என்ற பெயரில் தொகுத்துத் தந்தோம். அதில் செப்புப்பட்டயங்கள் என்ற பகுதியில் ஆறு பட்டயங்கள் பற்றிய விவரங்களை வெளியிட்டிருந்தோம். அவற்றின் மூல பாடங்களை வெளியிடவில்லை. தற்போது இந்நூலில் அவற்றின் அசல் வடிவங்களை வெளியிடுகின்றோம்.

### பட்டயங்கள்

ஆய்வுக்களஞ்சியம் முதற்பகுதி வெளியான பின்னர் இன்னொரு பட்டயம் பற்றிய செய்தி கிடைத்தது. பட்டயத்தின் நகல் ஓலையில் கிடைத்துள்ளது. இதனையும் சேர்த்து ஏழு பட்டயங்கள் ஆகின்றன.

### திருச்செங்கோட்டுப் பட்டயங்கள்

பேரரசன் இராசராசன் காலத்தில் கி. பி. 990-995 ஆம் ஆண்டுகளில் வெளியானவை. பட்டயங்களுக்கு, அவை கிடைத்த ஊரின் பேரை வைப்பது வழக்கம், அதன்படி இவை திருச் செங்கோட்டில் கிடைத்ததால் திருச்செங்கோட்டுப் பட்டயங்கள் என்று பெயர் பெறுகின்றன. நாமக்கல்லிலிருந்து துறையூர் செல்லும் வழியில் அமைந்துள்ள தூசியூர் (தற்போது தூசூர்) ஏரிக்கரையில் அமைந்துள்ள திருமூலட்டானமுடைய பரமேசுவரர் கோயில் பூசை பற்றியது.

கொல்லிமழவன் பிரதி கண்டன் சுந்தரசோழன், ஈழத்துப் போரில் மாண்ட தனது தந்தையின் நினைவாகத் தண்ணீர்ப் பந்தல் வைத்த செய்தி உள்ளது. ஒற்றியூரன் பிரதி கண்டன் என்பான் உவச்சர்களுக்கு நிலக்கொடை அளித்ததையும் அறிகின்றோம்.

### அரைய நாட்டார் பட்டயம்

கி. பி. 1401 இல் திருச்செங்கோட்டில் வாழ்ந்த மனிதாபிமானம் மிக்க உமையாயி என்ற தாசிப் பெண்ணின் சமூகப் பணியைத்

தெரிவிக்கின்றது. அவளது சொந்த ஊரான கொடுமுடியில் அனாதை ஆகிவிட்ட இரண்டு சிறுவர்களை எடுத்து வளர்த்தி வாலிப வயதில் அவர்களின் குலத் தொழிலைக் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்து, அவர்களின் உறவிலேயே பெண்பார்த்துத் திருமணம் செய்து வைத்து தம் குலத் தொழில் செல்வதற்கான உரிமையும் பெற்றுத் தருகிறாள்.

### அல்லாள இளையான் பட்டயம்

கொங்கு மண்டல சதகத்தில் சிறப்பிக்கப்படுகின்ற நாட்டுத் தலைவர்களில் அல்லாள இளையான் சிறப்புடையவன். நாயகர் என்ற ஆட்சிப்பட்டம் பெற்றவன். காவிரியில் ஜேடர்பாளையத்தில் அணைகட்டி, இராச வாய்க்கால் பிரித்து, பாசனத்திற்கு வழி கோலியவன்.

அவன் வேட்டுவர் குடியைச் சேர்ந்தவன், கொங்கு நாட்டு வேட்டுவக் கவுண்டர்கள் கி. பி. 1584 ஆம் ஆண்டு வைகாசி விசாகப் பெருவிழாவின் போது, திருச்செங்கோட்டில் கூடி, ஒரு மடம் அமைக்கின்றனர். இறைவன் பணிக்காக ஒரு தம்பிரான் நியமித்து, தொடர்ந்த செலவுகளுக்கான வருமானத்திற்கு ஏற்பாடு செய்கின்றனர்.

### நல்ல தம்பி பட்டயம்

கிட்டத்தட்ட பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு வைகாசி விசாகப் பெருவிழாவின் போது வேளாளக் கவுண்டர்கள் கூடி திருச்செங்கோட்டில் வேலூர்சாலையில் அமைந்துள்ள பணிமலைச் காவலர் கோயில் பூசாரி மூலமாக ஏற்பாடு செய்கின்றனர். அப்போது பூசை செய்து கொண்டிருந்தவர் நல்லதம்பிப் பண்டாரம் என்பவர். இப்பட்டயத்தை அவர் பேரில் நல்லதம்பிப் பட்டயம் என்று அழைக்கலாம். 1979 ஆம் ஆண்டு வைகாசி விசாகப் பெருவிழா விற்குப் பின்னர் கிடைத்த புதிய பட்டயம். செப்புப் பட்டயம் கிடைக்கவில்லை, அதன் நகல் ஓலைச்சுவடியில் கிடைத்தது.

கண்ணிவாடி, கண்ணியூர் கண்ணன் குலத்து செங்கோட கவுண்டர், அர்த்தநாரிக் கவுண்டர், குமர கவுண்டர், சின்னய்ய கவுண்டர், சென்னிமலைக் கவுண்டர், சுப்ரமணியக் கவுண்டர், துலுக்க கவுண்டர், படிமடம் அர்த்தநாரிக் கவுண்டர், ஆகியோர் கூடி முடிவெடுக்கின்றனர். வீட்டிற்கு அஞ்சு வீரராயன் பணம் அளிப்பதென்று முடிவு செய்கின்றனர்.

## காங்கேயர் பட்டயம்

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரை ஆதரித்தது காங்கேயர் குலம். திருச்செங்கோட்டிற்கு அருகில் உள்ள மோரூரைத் தலை நகராகக்கொண்டு வந்த சிற்றரசர்கள். வள்ளண்மை மிக்கோர் கண்ணன் குலத்தைச் சேர்ந்த வேளாளர் மரபைச் சேர்ந்தவர்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த காங்கேயன் ஒருவனுக்கு பிள்ளையில்லை. அதற்காக மோரூர் நல்ல புள்ளியம்மன் கோயிலில் ஒரு யாகம் நடக்கின்றது. குமார நல்லய்யன் என்ற செங்குந்தர் குல இளைஞன், தன் தலையைத் தானே அரிந்து யாக குண்டத்தில் போடுகிறான்.

அந்த இளைஞனின் தியாகம் கருதி, செங்குந்தர் குலத்திற்குச் சில உரிமைகள் வழங்கப்படுன்றன.

## கிருஷ்ணராஜ உடையார் பட்டயம்

கி. பி. 1784 இல் இப்பட்டயம் எழுதப்பட்டுள்ளது. திருச்செங்கோட்டைச் சுற்றி அமைந்துள்ள 18 ஊர்களைச்சேர்ந்த நாட்டுக்கவுண்டர்கள், காணியாளக்கவுண்டர்கள், குடியானவர்கள் தலத்துக் கணக்குப் பிள்ளைகள், மற்றுமுள்ள ஊரார் அனைவரும் கூடி, அர்த்தநாரீசுபரருக்கும், வேலவருக்கு, கார்த்திகை நாளுக்கு உச்சிக்காலத் தீபாராதனைக்கு, கிராமம் ஒன்றுக்கு ஆறு பொன்னும் ஐந்து பணமும் வருடந்தோறும் கொடுக்க முடிவு செய்கின்றனர்.

## மெய்க் கீர்த்தி

திருச்செங்கோட்டில் கிடைத்த பட்டயங்களிலிந்து ஒரு புதிய உண்மை தெரிகின்றது. அரசர்களுக்கு மெய்க்கீர்த்தி இருந்ததுபோல, அர்த்தநாரீசுவரருக்கும், செங்கோட்டு வேலவருக்கும் தனித்தனி மெய்க்கீர்த்திகள் இருந்திருக்கின்றன. திருச்செங்கோட்டில் எழுதப் படுகின்ற பட்டயங்களில் இவை சேர்த்து எழுதப்படுகின்றன. "மாமழை மன்னுக..." "என்று தொடங்கும் பாடலோடு அவை தொடங்குகின்றன. காஞ்சீபுரத்தில் கம்மையாற்றின் கரையில் பார்வதி தேவி அரிய தவசிருந்தது முதல், குமரப் பெருமான் பிரமனின் சிர சறுத்தது போன்ற பல செய்திகள் குறிப்பிடப் படுகின்றன. அரைய நாட்டார் பட்டயம், அல்லாள இளையான் பட்டயம், நல்லதம்பி பட்டயம் ஆகிய மூன்றிலும் இச்செய்தி தெரிகின்றது. காங்கேயர் பட்டயத்தில் மெய்க்கீர்த்தியின் சுருக்கம் உள்ளது.

## பாடல் முடிவு

அல்லாள இளையான் பட்டயம் இறுதியில் ஒரு பாடலுடன் முடிகிறது. ஒப்புக்கொண்டபடி தொடர்ந்து நன்கொடைகளை அளிக்காதவர்கள் குட்ட நோயால் அவதிப்படுவர் என்று முடிகின்றது.

## கண்ணப்பர் குலம்

அல்லாள இளையான் வேட்டுவர் குலத்தைச் சேர்ந்தவன். "கங்கையைத் தரித்த கடவுளர்க்கு, எச்சமிட்டு, கண்ணைப் பிடந்து சாத்தி முத்தி பெற்ற கண்ணப்பர்" வழிவந்தோர் என்று இலக்கிய நயத்தோடு கூறப்பகிடுறது. கொங்கு தேசத்துக் குரியவர், கொல்லி மலைக் குடையவர்கள் என்றும் கூறப்படுகிறது, "வாகிருது சொன்ன வரை வாயைக் கிழித்திடும் வெற்றி வாழரசர்" என்றும் கூறப்படுகிறது.

## சித்திரமேழி

இவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளதால் "சித்திரமேழிக் கொடிபடைத்த பெரியோர்" என்று கூறப்படுகிறது. இது காறும் வேளாளர்கள் பற்றிய குறிப்புகளில் மட்டுமே சித்திரமேழிக் கொடி கண்டிருந்தோம். அல்லாள இளையா நாயகர் காவிரியிலிருந்து ஜேடர்பாளையம் அணையைக் கட்டி இராசவாய்க்கால் வெட்டியவர் என்ற செய்தியை கார்மேக் கோன் பாடிய கொங்கு மண்டல சதகத்தில் அறிகின்றோம்.

## கண்ணன் குலம்

வேளாளரில் கண்ணன் குலத்தார் பற்றிய செய்தியை நல்ல தம்பிப் பட்டயத்தில் காண்கிறோம். கண்ணிவாடியில் குடியிருப்போர் பூசை செய்ய திருச்செங்கோடு வருகின்றனர்.

## சமுதயாப் பார்வை :

இப்பட்டயங்களால் என்ன நண்மை என்று கேட்பாரும் உண்டு வரலாறு என்பது மன்னர்களைப் பற்றிய செய்தி என்ற காலம் மாறி விட்டது. மக்களைப் பற்றிய செய்தியை அறிய இப் பட்டயங்கள் உதவுகின்றன. குறிப்பாக உமையாயியின் வரலாறு, சமுதாத்தில், ஒருவருக்கு தாழ்வு நேருகிற போது, பிறர் உதவிக்கு வரும் பண்

பினை அறிகின்றோம். கோவில்களில் திருவிளக்கு வைப்பதற்கும், பூசைக்காகவும் நிலையான ஏற்பாடு இருந்ததை அறிகின்றோம்.

### நவகண்டம்

தன் தலையைத் தானே அரிந்து தியாகம் செய்யும் வழக்கம் கிட்டத்தட்டப் பதினேழாம் நூற்றாண்டு வரை இருந்ததை காங்கேயர் பட்டயத்தால் அறிகின்றோம். இதனை நவகண்டம் கொடுத்தல் என்பர். பக்தியின் பேரால் எவ்வளவு பெரிய கொடுமைகள் நடந்து வந்துள்ளன என்பதை அறிய வியப்பாக உள்ளது. தியாகம் என்பர்; வீரம் என்பர்; மடமை என்பர். எப்படியோ, தற்போது தமிழ்நாட்டில் ஒழிந்துவிட்டது. நரபலி கொடுக்கும் வழக்கம் வட நாட்டில் இன்னும் இருப்பதாக அவ்வப்போது செய்தித்தாள்கள் மூலமாக அறிகின்றோம்.

### புதிய பட்டயங்கள்

திருச்செங்கோட்டுப் பெருமக்களிடம், இது போன்ற பட்டயங்களும், ஓலைச் சுவடிகளும் ஏராளமாக இருக்கலாம், திருச்செங்கோடு போன்ற கோயிற் சிறப்புடைய நகரங்கள் பல தமிழ் நாட்டில் உள்ளன. அங்கெல்லாம் சமுதாய வாழ்க்கையைப் பற்றிய பட்டங்கள், சுவடிகள் இருக்கலாம். அவை அனைத்தும் வெளி வருவது மிகவும் இன்றியமையாதது.

# அல்லாள இளையான் பட்டயம்

## மூல பாடம்

முதல் ஏடு : முதல் பக்கம்

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறிதான் தழைத் தோங்குக
தெய்வ வெண் திருநீரு சிறக்கவே

(3) அருளாலாதி நந்திகேசுபர னனுக்கிற கித்துத் திரேத துவா பரக் கலியுக

கிரேதா யுகத்துக்கு (5) விறுமா அற்சனை பண்ணுகையில் விறும்மகிரியும் விறும தீர்த்தமும் விறுமீசு (6) ரருமானவர்

திறேதாயுகத்துக்கு விஷ்ட்டு (7) ணு கிரியும் விஷ்ட்டுணு தீற்தமும் விஷ்ட்டுணு யீசுபரரு மானவர்

துவாபர யுக(8)த்தில் துற்கை அற்சனை பண்ணுகையில் துற்கை கிரியும் துற்க தீற்தமும் (9) ந்துற்கீசுரரு மானவர்

**இரண்டாம் பக்கம் :**

கலியுகத்துக்கு துற்கை அற்சனை பண்ணுகையில் (10) துற்கை கிரியும் துற்க தீர்த்தமுந் துற்கீசுரருமானவர்

கலியுகத்துக்கு நாக (11) அற்சனை பன்னுகையில் னாக கிரியும் னாக தீற்த்தமு னாகீசுபரரு மானவர்

யிப்படி (12) அனேகஞ் சதுரியுகம் பூசை கொண்டருளிய தேவந் தேவன் தெய்வ சிகா(13)மணிதேவதேவோர்த்தமன்தேவதா சார்ப்பூமன் பத்தப் பிரியன் பத்தவா (14) லன் பாற்பதி வல்லவன் பார்பதி மனோகரன் பார்பதி னாயகன் முத்திக்கு (15) வித்து முக் கணீசுபர னின்ற கோலமழகிய நிமலன் நேரமொரு பஞ் (16) சவற்னனப் பிரகாசன் திருமுக வோவன் தெண்டாயுத அஷ்த்தன் செ(17)ம்புத்தீ வில்த்திராவிட தேசத்தில் தொண்ட மண்டலத்தில் காஞ்சி (18) மானகரில் திருக்கம்பையாத்திலே பார்பதா தேவி அற்த பாகம் (19) பெற வேண்டி அரிய தபசு பன்னுகையில் அப்போது

**இரண்டாம் ஏடு : முதல் பக்கம்.**

கமட்சி கொ(20)டுத்தருளிய அற்தனாரீசுபரருடைய தம்பிரானார் அவருடைய தம் (21) பிரானார் அவருடைய ஸ்ரீமன் குமாரராகிய விப்பிறப் பிரியன் விசு(22)வமூற்திச் சுவபாலன் சறவனபவன் குக்குடத் துவசன் குங்கமவ(23)ண்ணன் கெவுரி திருமகன்க் கெண பதி சகோதரன் சுரலோக (24) லாட்சாதி லட்சன் தெவர் சிறை மீட்ட தேவர் சேனாபதி யீகரைப் பக(25)ட்டரக்கர் பட்டிடப் பதைக்க வீறு கொக்கரித்து மறக்களித்து குக்குடத்து(26)வசத் தினன் சக்கிற வட்டமேட்டிரட்டித் 'தாவிச் சிறகாலடிக்குந் தே (27)ரகைப் பிறதாப துரங்கன் வள்ளி தேவியானை மனோகரன் சிவி

**இரண்டாம் பக்கம் :**

(28)ட்டிக்கும் விறுமனை சிரசு திண்டாடக் குடுமியை நெடை வாங்குங்கு (29) மரர் கண்டிரவன் துஷ்ட்டச் சமணரை வெட்டிக் கழுமிசை வைத்த சு(30)ப்பிறமண்ணிய சுவாமியார் திருவுளப் படிக்கி

சுவ்விதிரி மன்மகா(31)மண்டல லேசுபறன் மேதினி மீசுர கண்டன் ஒருக் குடைக் கீளுலகமுழு (32) தாண்டவன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் எ(33)ம் மண்டலமுந் திறை கொண்டருளிய ராசாதிராசன் ராசப(34)றமேசுபரன் ராசமாத்தாண் டன் ராசக்கள் தம்பிரான் கண்டர் க(35)ண்டன் கட்டாரிச் சாளு வன் துட்டர் கண்டன் துட்டர்மோகந் தவிழ்த்(36)தோன் துஷ்ட்ட நெட்டுரன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் மூவரா(37)ய கண் டன் ஒட்டிய சுரதானன் துலுக்கர் தளவிபாடன் அசுசதி கெ(38)

மூன்றாம் ஏடு : முதல் பக்கம்

சபதி நரபதி நவகோடி நாராயணன் பூறுவ தெஷ்சன பஷ்சிம்ம உத்தி(39)ர சத்த சமுத்திராதிபதி ராசநாராயணன் ராசகேசரி ராச புயங்கவன் (40) ராசமனோ பயங்கரன் ராச கோலா கலன் ரணமுக சுத்தவீரன் அறிவிக்கு (41) அகத்தியன் பொறுமைக் குத் தன்மன் பகளுக்குக் குமணன் கோடைக் (42) குக் கருணன் சத்தியத்துக்கு அரிச்சந்திரன் மறத்துக்கு வன்னியன் அழ(43)குக்கு மன்மதன் வாழுக்கு அபிமன் பரிக்கு நகுலன் கரிக்கு தையன் (44) வில்லு விசையன் மல்லுக்கு வீமன் பதிடெடுப் பொம்மையும் பார் சங்கிலி (45) யும் படைத்த ராசதேவேந்திரன் அஷ்ட்டபோக துரந் திரன் சேரன் சோ(46)ழ பாண்டியப் பிறசஷ்டாசாரியன் சத்த சாகரமும் மொரு குடைக்கீழுல (47) கமுழு தாண்டவன் ஸ்ரீ கட்டா ரிச் சாழுவரின்

இரண்டாம் பக்கம்

உத்துங்கராயர் கட்ட(48)ாரிராயர் விருப்பாட்சிராயர் நரசிங்க ராயர் பிரவிடதேவமகாறாயர் (49) தேவமல்லிகாஷ் சுணராயர் சதா சிவதேவமகாராயர் வீரவசந்த(50)ராயர் கிருஷ்ண ராயர் அச்சுத ராயர் ராமராயர் எறிதிம்ம ராயர் திருமலை (51) ராயர் வேங்கிடபதி ராயர் ராமதேவ ராயர் ஆனை கொந்தி வேங்கிடப(52)திராயர் சீரங்க ராயர் பிரிதிவி ராச்சிய பாரம் பண்ணியருளா நின்ற

(53)விக்கிறமாறகப்பிறதாபவீறலட்சுமிவிசையலட்சுமி வாசாரன் (54) விசுவனாத னாயக்கர் வீரப்பனாயக்கரய்ய னவர்கள் னாழில்

விசை (55) யநகரம் பெருங் கொண்டை சந்திரகிரி திருப்பதி திருக் காளத்தி கா(56)ஞ்சிபுறம் படைவீடு திருவனாமலை தேவக்காபுரம் செஞ்சி வளுதிலன் (57) பட்டிச் சாவடி தஞ்சாவூர் திருவாரூர் திரு

**நான்காம் ஏடு: முதல் பக்கம்,**

மதூர் திருக்குடந்தை திருவை (58) யாருத சீரங்கம் திருச்சிராபழி திருவானைக் காவல் மதுரைக் கடுக்காடு (59) ராமேசுரங் கொங்கு தராபுரம் மலையாளம் கொச்சி ஈழமார்ப்பாண(60)ம் பட்டண மற்றுமுண்டாகிய அன்பத்தாறு தேசம்

பதிநெட்டு யுகமாவ (61) து முதலாகிய யுகம் அனந்தய னென்கிர யுகம் அந்த யுகத்தில் பாந் (62) தோண்றிச்சு ரண்டாவது அற்புதனென்னும் யுகத்தில் ஆகாச (63)ந் தோன் றிச்சு மூன்றாவது த்வாரசனென்னும் யுகத்தில் சந்திரா(64)த்தந் தோன்றினர் னாலாவது த்ராச னென்னும் யுகத்தில் காற்றுற்றோ (65)ன்றிற்றது ஆஞ்சாவது தண்டச னென்னு யுகத்தில் நெருப்பு தோன்(66)றிற்றது ஆறாவது வின்னச னென்னு யுகத்தி மழை தோன்றிச்சு ஏள(67)ா வது வினாயதனென்னு யுகத்தில் விளைவு

**இரண்டாம் பக்கம்**

தோன்றித்தது யெட்டாவது (68) அயபுத னென்னு யுகத்தில் வித்தை தோன்றிச்சு ஒன்பதாவது மையுத (69) னென்னு யுகத்தில் வேதம் தோன்றித்து பத்தாவது மணமீரண னென்னு(70)யுகத்தில் தன்மந் தோண்றிச்சு பதினோராவது மணியாரணன் என்னு யுக(71)த்தில் சோதிரிசம் தோன்றித்து பதிமூன்றாவது அலங்கிதனென்னு யு(72) கத்தில் சந்திராதித்தர் பொருந்தினர் பதினாலாதது அரவிந்த னென் (73)னு யுகத்தில மற்சகூற்ம பொருந்தினர் பதினஞ்சாவது கிறேதா யுக(74)த்தில் தேவரசுரர் பொருதினர் பதினாராவது திறேதா யுகத்தில் இராமர் பொ(75)ருதினர் பதினெழாதது துவாபுர யுகத்தில் தன்மர் திரியோதனர் பொருதி(76)னர் பதிநெட்டாவது கலியுகத்தில் கலியன் பிறந்த பின்னால் வறையும்

ஐந்தாம் ஏடு: முதல் பக்கம்

(77) னாலு வேதமும் ஆறு சாத்திரமும் பதிநெட்டு புராணமும் யிருபத்தெட்டு (78)த் தேய வியாகமும் முப்பத்திரண்டு அறமும் அறவத்து னாலு கலைக்கியானமும் (79) உள்சமைய மாறு பிறசமைய மாறு விழங்கப்படா நின்ற சோம சூரிய (80) வங்கிஷ மானவன் அழுதிராசாச் சூரன் மகன் ஆதினாறாயணன் மக(81)ன் விறுமர் விறுமர் மகன் வீறரு மகன் மாரீசன் மகன் காசிபன் (82) மகன் ஆதித்தன் மகன் சினியன் மகன் நயதிரியன் மகன் போச (83) வாகனன் மகன் துந்தும் ராசன் மகன் திறிச்சங்கு மகன் அறிச்சந்(84)திரன் மகன் லோபிதாவிசனன் மகன் நளன் மகன் இருமூச்சியன் (85) மகன் பொன்னுருவி மகன் பரிதாபி மகன் அமிறதன் மகன் அன(86)ந்தராசன் மகன் மத்துக்குரிச்சினன் மகன் சேவின் மகன் திரு(87)யுரு மகன் ராகு மகன்

இரண்டாம் பக்கம்

மீரேசன் மகன் அசன் மகன் திசரதன் மகன் (88) ராமர் மகன் லவனன் மகன் வருது மகன் நீளகோபலன் மகன் நந்(89)தகோபாலன் மகன் வாசுதவன் மகன் கிருஷ்ன றாயர் மகன் மன்மதன்(90) தலமுறை முப்பத்தாறும் புறத்த இன்னாள் வரைகும் தேவரிஷி விறுமரிஷி (91) விஷ்னுரிஷி தேனியே அஷ்டமாசித்தர் நவனாத சித்தர் கலியாண (92) சித்தர் இருக்க படா நின்ற போமீசை - மாமுனி பாதலோக - மாமுனி துரு (93) வாசமுனி கண்டலமாமுனி தவமுனி கோமுனி வனச மாமுனி மகாமுனி (94) கவசமாமுனி னூதமாமுனி அகத்திய மாமுனி பிறலவிச மாமுனி சக(95)ன் சனந்தன் சனக்குமாரீசர் சாத்தி அக்கினி தெரிசினிகள்

ஆறும் ஏடு: முதல் பக்கம்

வீசு (96) வாமுத்திர மாமுனி சோமாக்கினி மாமுனி அரவாச மாமுனி பரஞ்சோதி (97] மாமுனி கணனாதர் விறும கணனாதர் வீரகணனாதர் சிவயோக கணனாதர் [98] ஞானகலியாணர்

அஷ்ட்ட மாசுத்தர் கணனாதர் அந்திரமா சித்தர் கலியாணர் [99] அதிசெய ஞானசித்தர் கலியானர் ஆகாசஞான சித்தர் கலியாணர் அம்பிறக[100]சித்தர் கலியாணர் பிலவேசஞான சித்தர் கலியாணர் அனுமீசர்றா [101] டைக் காடாதவமுனி மழைமுனி வியாக்கிரம ப்ாதமுனி பதஞ்சலி மா[102]முனி

இப்படியாக் கொத்த னாற்பத்தென்னாயிறம் இருஷிகளு மறு பதினா [103] யிறம் முனிவர்களும் முப்பத்தினாலயிரமங் கணனாதர் களும் னாற்பத்தினா [104] லாயிரம் ஆதி அந்த வயிரவர்களுட ஆயிரங் கெருட காந்துறுவர்களும் [105] முப்பத்தி முக்கோடி தேவர்களும் ஆகாச வருண நந்திவாகன ஒருகோடி (105) முக்

இரண்டாம் பக்கம்

கண்ணுள்ளவர்கள்ளொரு கோடி பேர் ஆயிரங் கண் ணொரு கோ [106]டி பேர் ஈசுபரனுக்கு ஒரு னொடிப் பிறமாணம்

யிப்படியாக் கொடுத்த ரிஷ [108] பவாகன வேதசாத்திர புராண ஆகமும் ஆதிவேதனாகி விறையில்லாத வி[109]த்தாகி ஞான சுருபமாயி ஞான பரனாய சிறப்பிற்காசனாயி சிற் சுரு பனாய [110] நீடுள்ள நீற்குணனாய நிராமயமாயி நிற்மலனாய துரிய ரதீத-னாய சச்[111]சுதானந்த சுருபனாயறியாத - வனுமாயி தார்க்கு மெட்டாதவனுமா யிழி[112]ந்த விடத்தனுகா தவனுமாயி மூன்று நடுவிறுதிவ்வியாதனுமாயி [113] காடிக் குமாரன் கூழி கொட்ட கூகை பாசாசு தொக்கெண தாளமொத்த [114] துற் சனக் கூழை கொட்ட பாரியாய் நீழிய கச்சை கட்டய்யராலே வெடுத்த யே[115]ாத்தீரன் னாககிரி வேலாத சுவாமி அற்தனா ரீசுப சுவாமி திருவிளத்தில்

ஏழாம் ஏடு: முதல் பக்கம்

காவல் [116] வற் பூவல் வாமர் வலவர் வேடர் வேட்டுவர் கங்கையைத் தரித்த கடவுளாற் [117] கு எச்சமிட்டு கண்ணை

பிடந்து சாத்தி முத்தி பெத்த கண்ணப்பனான பெரியோர் காள [118] விதிரி மலைகாவலர் செம் பொற்சிலை கொண்டு வில்வத்தி லேறியே சிவறாத்திரி [119] கண்ட பெரியோர் சித்திரபுத்திரர் சீமைக்குடைய பெரியோர் சேவுகத்து1[20]க்கும் உடையபேர் கொங்கு தேசத்துங் குடையபேர் கொறவர்கள் கற் [121]ற வர்கள் கொல்லி கிரிக்குடையவர்கள் கூற்றியனாடு தனிலே வாசகங் [122] கூறி வைத்துக் கொண்ட பெரியவர்கள் வங்கக் கடலொலி கைவர [123] கைமாலையு யத்தோர் சித்திரமேழிக் கொடிப் படைத்த பெரியோர் வாகி[124]ருது சொன்ன வறை வாயைக்கிழித்திடும் வெத்தி வாழரசர் மணவா [125] ழரெண் பெரி

**இரண்டாம் பக்கம்:**

யோர் குன்றத்தூர் துருகம் குன்னாடிக் கவுண்டர் மோரு [126]று பொன்ன வேட்டுவரில் கீழ்கரை பூந்துரை னாட்டில் பாண்[127] டிக் கோத்திரத்தில் பேரக்ககவுண்டன் வேம்பங் கோத்திரத்தில் குமர[128]கவுண்டன் சினாக்கவுண்டர் பரமத்திச் சீமை மூளை கோத்திரத்தில் அல்லாழி [129]யினையான் னாயக்கர் திருமலை னாயக்கரவர்கள் னாதகவுண்டர் முத்துக்கா [130] ழி கவுண்டர் தலையவாடு குன்னாடு கோத்திரத்தில் வள்ளய கவுண்டர் மணை [131]ல் னாடு பிள்ளைத் தெவணான் நடந்தை குமார கவுண்டர் வேங்கல னா[132]டு காளத்தி கவுண்டர் நீலியப்ப கவுண்டர் கெழங்கு னாடு திருமலை கவுண்[133]டர் குமாரசாமி கவுண்டர் பின்னுங் கொங்கு மண்டலத்திலுள்ள வாழர[134]ச மணவாழ ரெலாருங் கூடித் திருச் செங் கோட்டில்

**எட்டாம் ஏடு : முதல் பக்கம்**

கலியுக சகாற்பிம் [135] **4685** கு மேல் செல்ல நின்ற ஈசுரஷு வைய்யாசி மீ" யரு உ [136] பூர்ணமும் விசாக நட்செத் திரமும் பெத்த சுபதினத்தில் காமாட்சித் தம்பிரானுக்கு [137] மட தற்மம் உண்டு பண்ணிக் குடுத்தது. மடம் னாககிரியன் மேல் அற்த னா [138] ரீ சுபர சுவாமியார் சன்னதிக்கு மேற்கு விஷ்டுனு தீர்த்

தக்கு தெற்கு [139] துர்கை அம்மன் சன்னதிக்கு வடக்கு அமர மணியார் மண்டபத்துக்கு கிழ [140]க்கு யிது நடுவில் மடம் யிதில் யிருந்துக் கொண்டு அர்த்தனாரீசுபர சுவாமி [141] சன்னதியில் திரு விழக்கும் திருமாலைக்கட்டிக் கொண்டு வரவும்

யிதுக்கு [142] வற்தனை பல்லக்கு பிறபுக்கு னாகறம்பு உக குதிரையேரிய பிறபுக்கு னா [143] கறம்பு ரு சேறுவை காறனுகு னாகரம்பு ரு பண்ணைய் குடிக்கி ஏறு

இரண்டாம் பக்கம்:

[144] க்கு கம்பு வள்ளம் உ கலியாணத்துக்கு மாப்பிளை வீடு னாகறம்பு க பென் வீ [145] டு னாகறம் க யிந்த மேறைக்கி நடப்பி விச்சி குடுக்குறோ மென்று னாங்கள [145] னைவருங் கூடியெழிதி குடுத்ததற்ம சாசனப் பட்டையம்

யிந்தபடிக்கு சந்தி [147] ராதித்தருள்ள வறைக்கும் மலையுள்ள காலத்துக்கும் நிலையுள்ள தன்மமாயிக [148] ட்டளை யிட்டது யிந்த தற்மம் தேசஞ்சீர்மை நாடு எங்கிலுண்டாகிய வாழரசர் [149] மணவாழருந் தற்ம பரி பாலனம் பண்ணி நடப்பிச்சி கொண்ட பேர்கள் யி [150] ந் திராதி போகமும் அனுபவிச்சு சந்திராதித்தருள் ளவறைக்கும் சாயுச்சிய [151] பதவிருப்பார்கள் யிந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர் கெங்கை [152] க் கறையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவார்கள்.

ஒன்பதாம் ஏடு: முதல் பக்கம்

தட்டகல் விட்டசூலம் நீடுகல் வெட்டெல்லை
வட்ட மா வயவங்கள் தோறுமக தேவர்தான தற்மம்
யிட்டிடை பண்ணி மெத்த யிடஞ்சலே செய்புவாற்க்கு
குட்டனோய் நறகந்தன்னில் குழிப்பது தின்னந்தானே.

[156] செங்கோடர் லட்கிப்பார் உ.

# ஆய்வுக் குறிப்புகள்

## அறிமுகம்

திருச்செங்கோடு நகரத்தில் வைகாசி விசாகப் பெருவிழா வின் போது இறை பூசைக்கு ஏற்பாடு செய்த செய்தியைத் தருவது இப்பட்டயம். இந்த ஏற்பாடுகளைச் செய்தவர்களில் குறிப்பிடத் தகுந்த தலைவர்களில் அல்லாள இளையா நாயகர் என்பவர் குறிப் பிடத் தகுந்தவர். காவிரி ஆற்றில் ஜேடர்பாளையத்தில் அணை கட்டி சேலம் மாவட்டத்தில் பாய்கின்ற இராச வாய்க்கால் என்னும் வாய்க்கால் வெட்டி வேளாண்மை வளர்த்தவர் என்ற தகவலை கொங்கு மண்டல சதகம் என்னும் நூலின் மூலம் அறிகின்றோம் அந்தச் சிறப்பு கருதி இப்பட்டயத்தை அவர் பேரால் அழைக்கின் றோம். பொதுவாகப் பட்டயங்களை அவை கிடைத்த ஊரை வைப்பது வழக்கம். ஏற்கனவே இரண்டு பட்டயங்களுக்கு திருச்செங்கோட்டுப் பட்டயங்கள் என்ற பெயர் உள்ளதால், பட்டயத்தில் உள்ள செய் தியை வைத்துத் தலைப்பை அளிக்கின்றோம்.

## முதல் பதிப்பு

இப்பட்டயத்தை Dr. A. சுப்ரமணியம் முதலில் சென்னையில் நடைபெற்ற இந்தியக் கல்வெட்டியற் கழகத்தின் கருத்தரங்கில் படித் தார். Journal of Tamil Studies எண் 13 இல் Triuchengodu Plates of Srirangaraya - A study என்ற தலைப்பில் வெளியாகியது. அவரது கருத்துகளை அறிய அவரது கட்டுரையையே படித்து அறிந்து கொள்க.

## மறுபதிப்பு

பட்டயத்தினை மீண்டும் வாங்கிவந்து, முழுக்கப் படித்து தற் போது வெளியிடப்படுகின்றது. ஆய்வதில் உதவியவர் பெ. அர்த்த நாரீசுவரன் ஆவார். பட்டயத்தில் எகர, ஒகர உயிர்மெய்கள் குறில் கள் போலத் தோன்றும். ஆனால் அவை நெடில் வடிவங்களேயா கும். அதனால் இடம் பொருளறிந்து நெடில் இடங்களை நெடிலாகவும் பதிப்பித்துள்ளோம் அதனால் படிப்போர் நேரடியாகப் பொருள் அறி யாலம். வரிக்கு வரி தனித்தனியாக வெளியிடும் மரபை மாற்றி பொருள் வாரியாகப் பிரித்து வெளியிட்டுள்ளோம். வரி எண்களை நடுவிலேயே சேர்த்துள்லோம். இது ஆராய்ச்சியாளர்களின் மறு பரிசீலனைக்காக. மற்றையோர் அது பற்றிக் கவலற்க.

### காலம்

கி. பி. 1584-ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா மதியத்தன்று இப்பட்டயம் எழுதப்பட்டுள்ளது. வைகாசி மாதம் 14-ந் தேதி.

### பாடல் தொடக்கம்

பாடயம் ஒரு பாடலோடு தொடங்குவதைக் காணலாம். இதே பாடல் வேறு இரு பட்டயங்களிலும் காணப்படுகிறது. எனவே இக்கால கட்டத்தில் இவ்வாறு தொடங்குவது மரபு எனக் கருதலாம்.

### கோயில் மெய்கீர்த்தி

"அருள் கிருபையால் ஆதி நந்திகேசுபரன் அனுக்கிரகித்து திருவாய் மலர்ந்தருளின படி" என்று தொடங்குவதிலிருந்து இரண்டாம் பக்கம் 30-வது வரியில் "சுப்பிரமணிய சாமியார் திருவுளப்படிக்கி" என்பது வரை திருச்செங்கோட்டு நகரத்தில் உள்ள வேலவரின் மெய்க்கீர்த்தி என்று கருதலாம். மூன்று பட்டயங்களில் இதுபோல உள்ளது.

உலகம் தோன்றிய நாளிலிருந்து, பார்வதி தேவியார், காஞ்சியில் கம்பை யாற்றின் கரையில் தவமிருந்து பரமேசுவரனை அடைந்ததும், முருகப் பெருமானின் பெருமைகளையும் மரபு வழிப் படி கூறும் செய்திகளாகும். அக்கால மரபு இது என எடுத்துக் கொள்ள வேண்டுமே யன்றி உள்ளே நுழைந்து ஆராய்தல் தேவையானதல்ல.

### மன்னர் மெய்கீர்த்தி

30-வது வரியிலிருந்து 50-வது வரிரைவ விஜயநகர மன்னர்கள் பற்றியும் அவர்களின் உரிமைபெற்று ஆட்சிபுரிந்த சீரங்கராயர் வரை ஆன தலைவர் களைப்பற்றிய செய்திகள் உள்ளன. சோழர்கள் காலத்தில் தொடங்கிய மெய்க்கீர்த்தி மரபு காலப்போக்கில் வெற்று ஆடம்பரமாக வளர்ந்து விட்டதை அறியலாம். மெய் குறைந்து கீர்த்திமட்டும் பெருகிவிட்டது. இருந்தாலும் இதிலுள்ள பல செய்திகள் அரசியல் வரலாறு எழுத உதவுமென்பதில் ஐயமில்லை. அரசு வம்சம் கட்டாரிச் சாளுவர் ஆகும். அவரது உரிமை பெற்று ஆட்சிபுரிந்த ராயர்கள் பெயர்ப்பட்டியல் உள்ளது.

### ஆட்சிப்பரப்பு

50-வது வரி முதல் 60 வரி வரை விஜயநகர மன்னர்களின் ஆட்சிப்பரப்பு கூறப்படுகிறது. கொங்கு நாட்டின் தாராபுரம் குறிப்படுகிறது. இக்காலத்தில் தலைநகரம் தாராபுரம் என்ற உண்மை புலனாகிறது.

### புராணச் செய்திகள்

60வரி முதல் 115வது வரி வரை மீண்டும் புராணச்செய்திகள் "அர்த்த நாரிசுபார், வேலாயுதசாமி திருவுளத்தில்" என்ற தொடருக்கு முன்னுரையாக இவை அமையும்,

அத்ததனையும் பழைய மரபுகள். இறைமை பற்றிய பல கற்பனைகள். மூத்த தலைமுறையினர் பெரும்பாலும் கேள்விப் பட்டிருப்பர். இளைய தலைமுறையினர்க்கு அந்த வாய்ப்பு பிடைத்திருக்காது. பொருள் விளங்க உரை செய்வதாயின் பெரிய நூல் ஆகிவிடும்.

### வேட்டுவர்

பட்டயத்தின் செய்தி இனிமேல்தான் தொடங்குகின்றது கொங்கு நாட்டில் முக்கியமான குடிகளில் ஒன்றாகிய வேட்டுவர் பற்றிய முன்னுரை கூறப்படுகின்றது. காவல், வற்பூவல், வாமர், வேடர், வேட்டுவர் என்று குடிப்பெயர் கூறப்படுகிறது. "கங்கையைத் தரித்த கடவுளார்க்கு, எச்சமிட்டு, கண்ணைப் பிடந்து சாத்தி, முத்தி பெற்ற கண்ணப்பர்" என்று காளத்தியில் முத்தி பெற்ற கண்ணப்ப நாயனார் வழித் தோன்றலாகக் கூறப்படுகின்றனர். மற்றும் விதிரிமலைக் காவலர், செம்பொற்சிலை கொண்டு வில்வத்திலேறிய சிவராத்திர கண்ட பெரியோர் [கதை தெரியவில்லை] சித்திரபுத்திரர், சீமைக்குடைய பெரியோர், சேவுகத்துக்கும் உடையபேர், கொங்கு தேசத்துக்குடைய பேர், கொறவர்கள், சமயத் தலைவர்கள் கற்றவர்கள் கொல்லிமலைக் குடையவர்கள், கூற்றியநாடு தனிலே வாசகங் கூறி வைத்துக் கொண்ட பெரியோர் என்றவாறு பல சிறப்புகள் கூறப்படுகின்றன, மேலும் வங்கக் கடலொலி கைவர கைமாலையுயத்தோர் என்பதன் பொருள் புரியவில்லை. சித்ரமேழிக் கொடி படைத்தோர் எனப்படுவது அரிய செய்தியாகும். கலப்பைக் கொடி விவசாய மக்களைக் குறிக்கும். இவர்களும் வேளாண்மையில் ஈடுபட்டதால் மேழிக் கொடி பெற்றிருந்தாகத் தெரிகிறது.

**கூடியோர்**

அவையில் கூடியிருந்தோர் பெயர்கள் வருமாறு :

1. குன்றத்தூர் துர்கம், குன்னாடிக் கவுண்டர்
2. மோரூர் பொன்னவேட்டுவரில் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில்
   பாண்டி கோத்திரம் பேரக் கவுண்டர்
   வேம்பங் கோத்திரம் குமர கவுண்டர், சின்னாக் கவுண்டர்
3. பரமத்திச் சீமை
   மூளைக் கோத்திரம் அல்லாழி இளையா நாயக்கர்
   ,, ,, திருமலை நாயக்கர்
   ,, ,, நாத கவுண்டர்
   ,, ,, முத்துக் காளிக் கவுண்டர்
4. தலைய நாடு
   குன்னாடு கோத்திரம் வள்ளய கவுண்டர்
5. மணல் நாடு பிள்ளைத் தேவணன்
6. நடந்தை குமார கவுண்டர்
7. வேங்கல் நாடு காளத்தி கவுண்டர், நீலியப்ப கவுண்டர்
8. கிழங்கு நாடு திருமலை கவுண்டர்,
   குமாரசாமி கவுண்டர் மற்றும் பலர்.

திருச்சங்கோடு குன்றத்தூர் துர்க்கத்தைச் சேர்ந்தது. மோரூர், நடந்தை என்பன ஊர்ப் பெயர்கள். பரமத்திச் சீமை அரைய நாட்டைச் சேர்ந்தது. தலையநாடு, மணல்நாடு, வேங்கலநாடு, கிழங்கு நாடு ஆகிய கொங்கு 24 நாடுகளில் சில.

**அல்லாள இளையான்**

ஊராளும் பொறுப்பு அல்லாள இளையானுக்கு இருந்தது. அதனால் நாயக்கர் பட்டம் உண்டு. அவன் அரையநாட்டு வடகரை ஆற்றூரில் இருந்தவன். திருச்செங்கோட்டில் ஸ்ரீ நாகேசுவரர் அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியவை கட்டியவன். கொங்கு மண்டல சதகத்தில் இவனைப் பற்றிய குறிப்பு வருகின்றது

வடமுக நின்று வருகா விரியின் வளத்தை யென்றுந்
திடமுறு கொங்கினும் பாசனமாகச் செலப்பிரித்த
அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கம் அமைந்துவளர்
வடகரை யாற்றூர் திகழ்வது வுங் கொங்கு மண்டலமே

அவன் எடுத்த வாய்க்கால் இராசவால்க்கால் ஆகும். அது சேடர் பாளையம் அணையின் இடது கரையில் பிரிகின்றது. கொங்கு நாட்டில் காவிரியிலிருந்து பிரியும் முதல் வாய்க்கால் இதுயோகும். இதற்கு முன் காவிரியால் கொங்கு வளம்பெறவில்லை. இதனை மாற்றி புகழ் அல்லாளனை வந்து அடைகிறது.

**காலம்**

சக ஆண்டு 4685 கி பி 1584 ஈசுவர ஆண்டு வைகாசி மாதம் பவுர்ணமி, விசாக நட்சத்திரம் 14ந் தேதி

**கொடை**

காமட்சித் தம்பிரான் என்பவருக்கு ஒரு மடம் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். எல்லையாவன. அர்த்தநாரீசுபரர் கோயிலுக்கு மேற்கு விஷ்ணு தீர்த்தத்திற்கு தெற்கு, துற்கை அம்மன் கோயிலுக்கு வடக்கு அமரணியர் மண்டபத்துக்குக் கிழக்கு திருவிளக்கு இட்டு திருமாலை கட்டி வருதல் கமாட்சித் தம் பிரானின் பணியாகும்.

தொடர் செலவுகளுக்கும் ஏற்பாடு செய்கின்றனர்.

பல்லக்கில் வருவோர் 24 நாகறம்பு
குதிரையில் வருவோர் 5 நாகறம்பு
சேறுவை காரர் 5 நாகறம்பு
பண்ணை குடிக்கு ஏருக்கு 2 வள்ளம் கம்பு
கலியாணத்தில் மாப்பிள்ளை வீடு 1 நாகறம்பு
,, பெண்வீடு 1 நாகறம்பு

என்றபடி வைத்துக் கொடுக்க வேண்டும். இங்கு நாகறம்பு என்றால் என்ன வென்று எங்களுக்குத் தெரியவில்லை. சந்திரன், சூரியன் உள்ளவரை இந்த தற்மம் நடக்கப் பணிக்கின்றனர்.

**நன்மை தீமை**

இதை விடாமல் செய்வோர் இந்திராதி போகம் அனுபவிக்க வாழ்த்துப் பெறுகின்றனர் இதை விலக்கு வோர் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்தில் போக வசவு பெறுகின்றனர். மற்றும் குட்டநோயால் அவதியுறுவார் எனவும் விதிக்கப்படுகின்றன. வசவு பாட்டு வடிவில் முடிகின்றது.

செங்கோடர் காப்பார் எனப்பட்டயம் நிறைவுறுகின்றது.

**அளவுகள்**

பட்டயம் செப்பால் ஆனது. 23.5 சென்டிமீட்டர் நீளம், 5.5 சென்டி மீட்டர் அகலம் கொண்டது, ஒன்பது ஏடுகள் உள்ளன, நடுவில் ஒரு துளை உள்ளது. ஏட்டின் இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது. ஒரு முகப்பு ஏடும் உள்ளது. அதன் முன் பக்கத்தில் ஒரு விநாயகர், நந்தி, அர்த்தநாரீசுபரர், லிங்கம், பூச் செடிகள் முதலியன செதுக்கப்பட்டுள்ளன. முகப் பேட்டைச் சேர்த்து மொத்தம் 10 ஏடுகள் உள்ளன.

**நடுகற்கள்**

கொங்கு நாட்டில் பெரியார் மாவட்டத்தில் வேட்டுவர் குடிப் பெருமக்களுக்கு பல நடுகற்கள் உள்ளன. எழுநூற்றி மங்கலத்தில் அழகன் காளி என்பவர் இராசேந்திர சோழன் காலத்தில் நடைபெற்ற பூசலில் காலமானார். சிவகிரியில் இரண்டு நடுகற்கள் உள்ளன. ஒன்றில் "கிழங்கன்" என்றும் மற்றதில் "கிழங்க வேட்டுவரில் கிழங்கன் பெரிய கிழங்கன்" என்றும் உள்ளது. பழமங்கலம் என்ற ஊரில் இட்டேரியில் உள்ள நடுகல் பாடல் வடிவில் உள்ளது. "வாய்ந்த புகழ் மங்கலத்து" எனத் தொடங்கும் வெண்பா உள்ளது. "சொக்கனேந்தல்" என்பானுக்கு :எடுக்கப்பட்ட கல். கொங்குநாட்டு வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த இடம் இக்குடியினருக்கு உண்டு. 'பூர்வகுடி' என்றும் அழைக்கப்படுவர்.



# நல்லதம்பிப் பட்டயம்

## மூல பாடம்

முதல் ஓலை: முதல் பக்கம்

ஹரிஓம் - அப்பிலியபட்டி-க

இரண்டாம் பக்கம்

1. வைய்ய நீடுக மாமழை மன்னுக மெய் விரும்பிய வன்பர் விளங்குக சைய்வநன்
2. னெறிதான் தழைத் தோங்குகத் தெய்வ வெண்டிரு நீறு சிறக் கவே அருளாலா
3. தி நந்திகேசுர சுவாமியா ரனுக்கிரகத்து திருவாய் மலர்ந்தளின படி கிறே
4. தா துவாபுற கலியுக திறேதா யுகத்தில் விறும்ம அற்சனை பண்ணுகையில்
5. விறும்ம கிரியும் விற்ம்ம தீர்த்தமும் விறுமீசுரருமானவர் திரேதா யுகத்தில் விஷ்[ணு]
6. அற்ச்சனை பண்ணுகையில் விஷ்ணுகிரியும் விஷ்னு தீர்த்தமும் விஷ்ணீசுர
7. ருமானவர் துவாபுரதா யுகத்தில் துற்க்கை யற்சனை பண்ணு [கை]யில் (துற்கையில்)
8. துர்க்கை கிரியும் துற்க்கை தீர்த்தமும் துற்கீசுரருமானவர் கலி யுகத்தில் நாகம் அற்சனை
9. பண்ணுகையில் நாககிரியும் நாக தீர்ந்தமும் நாகீசுரருமானவர் இப்படி அனேக(ம்)

**இரண்டாம் ஓலை: முதல் பக்கம்**

10. ஞ் சதுரியுகம் பூசை கொண்டருளிய அகிலாண்ட கோடி பிர மாண்ட நாயகன் தேவர்
11. தேவன் தேவசிகாமணி தேவோத்தமன் தேவர்காசறுவ பூமன் பத்தப் பிரியன்
12. பத்தவடசான் பார்பதி வல்லவன் பார்பதி பிராண நாயகன் முத்திக்கி வித்த
13. கன் முக்கண்ணீசுரன் நின்ற கோல மழகிய நிமலன் நேரமொரு பஞ்சவற்னப் பிரகாசன்
14. திருமுகவோவன் தெண்டாயுத வஷ்த்தன் செம்புத்தீவிற் திரா வட தேசத்திற் தொ
15. ண்டமண்டலத்தில் காஞ்சிமானகரிற் திருக்கம்பையாற்றில் பார்பதி தேவி யற்த்த
16. பாகம் பெற வேண்டி யரிய தவசு பண்ணுகையில் அப்போது காட்சி கொடுத்தருளிய கொ

**இரண்டாம் ஓலை: இரண்டாம் பக்கம்**

17. ங்கு மண்டல[ம]த்திற் தெஷ்சன கயிலாச ஸ்ரீநாக பறுவதத் தில் அற்த்தபாகங் கொடுத்தரு
18. ளிய அற்த்தனாரீ சுரருடைய தம்பிரானார் அவடைய ஸ்ரீமற் குமாரராகிய விப்பிரப்பிறி
19. யன் விசுவமூற்த்தி சுவபாலன் குக்குடத்துவசன் குங்கும வற்னன் கெவுரி
20. திருமுகன் கெணபதி சகோதரன் சுரலோக லட்சாதி லட்சன் தேவசிறை மீட்ட தேவர் சே
21. னாபதி பக்கறை பகட்ட ரக்கர் பட்டிட பதைக்க வீறுகொக் கரித்தமாக்களித்த குக்குடத்து
22. வசன் சக்தி வட்டமேட்டிரட்டித் தாவிச்சிர காலடிக்குந் தோகைப் பிரதாபதுரங்கன் வ

**மூன்றாம் ஓலை: முதல் பக்கம்**

23. ள்ளி தேவியானை மனோகரன் சிட்டிக்கும் விறுமாவைச் சிசு திண்டாட குட்டிக் குடுமியை

24. நெட்டை வாங்கும் குமரர் கெண்பீரன் துஷ்ட்டச் சமணரை வெட்டிக்கழுமிசை வைத்த சுப்பிர

25. மண்ணிய சுவாமியார் திருவுளப் படிக்கி, சுவஷ்திரிமன் மகா மண்டலேசுரன் மேதினி

26. மீ சுரகண்டன் ஒரு குடைக் கீழுலகமுழு தாண்டவன் கண்ட நாடு கொண்ட கொண்ட நாடு

27. கொடாதவன் எம்மண்டல முந் திரை கொண்டருளிய ராசாதி ராசன் ராசபரமேசுரன்

28. ராசமாற்த் தாண்டன் ராசாக்கள் தம்பிரான் கண்டரகண்டன் கட்டாரிச் சாழுவன் துஷ்

## மூன்றாம் ஓலை: இரண்டாம் பக்கம்

29. ட்டர் கண்டன் துயரமோகந் தவிழ்த்தான் ஒட்டியசுரதானன் துலுக்கர் தளவிபாடன் அசு

30. பதி கெசபதி நரபதி நவகோடி நாராயணன் பூறுவதெஷ்ண பட்சிம்ம உத்திர சமுத்தி[ர]த்தி

31. லுள்ள தேவரருள் கருணை பெருகி வாளாநின்ற அப்பாச்சி ராயர் மகாதேவ ராயர் கிஷ்ண

32. ராயர் ரனுமந்த ராயர் வீரவசந்தராயர் கட்டாரி சாழுவராயர் வங்கிட்ட ராயர் அவ்வுதர

33. னராயர் பாப்புராயர் மீனாட்சிராயர் விறுதுபெற்ற ராயர் சேரன் சோழன் பாண்டிய ராயர்

## நான்காம் ஓலை: முதல் பக்கம்

34. முதலாதிய தேவாதி தேவர்களறியும் படிக்கி திருச்சங்கோட்டி லிருக்கும் அற்த்தனாரீசுர

35. சுவாமியாருக்கு பாகம்மாள் பார்பதி மனமகிழ் குமாரசுவாமி யாருக்கு ஆதிகேசுரர் வயி

36. ரவன் தண்டீசுரர் பனிமலை காவல் சாமியார் பூசை அற்சனை புரிகின்ற நல்ல

37. தம்பி பண்டாரம் எறருளமுத்துத் துலுக்கப் பூசாரிக்கி சுபகிருது ௵ வைய்யாசி மீ˚ சுக்கிற

38. வாரம் விசாக நஷ்சத்திரத்தில் உபயமான திருமாலைக் கட்
டளை நடப்பிவிக்கத் தக்கதாக கண்

39. ணியம்மன் அரியதக்கதாக கண்ணிபாடி கண்ணியூர் கண்
ணன் குலத்தில் செங்கோட கவு

நான்காம் ஓலை இரண்டாம் பக்கம்

40. ண்டன் அற்த்தனாரிக் கவுண்டர் குமர கவுண்டன் சின்னய
கவுண்டன் சென்னிமலைக் கவுண்

41. டன் சுப்பிறமன்னியக் கவுண்டர் துலுக்க கவுண்டன் பழமடம்
அற்த்தனாரிக் கவுண்டன் இவர்கள்

42. ளெல்லோருங்கூடி செங்கோடனுக்கு திருமாலை கட்டளைக்கி
வைக்க வீட்டுக்கு

43. வீரராயன் பணம் வீட்டுக்கு அஞ்சு பணமென்று கட்டளை
யிட்டு அரிச்சந்திர மகாராசாவை

44. ப் போல பொய்யாத சத்திய வாக்குநாலே சொல்லி நடப்பி
விச்ச தருமத்தை ஆராமொருத்தர்

ஐந்தாம் ஓலை முதல் பக்கம்

45. அந்த மகா புண்ணிய தரும்ம கீர்த்திகளுக்கு நிந்தனை சொன்
னதே யானால் கெங்கைக் கறை

46. யிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்தில்ப் போவான்
அரவதாம்பபடியில் வினக்கு வைக்கா

47. த பாவதோஷத்திலே போவான் அது பாவ புண்ணியமறிந்து
யாதாமொருவன் நடந்துக் கொ

48. ண்டதே யானால் மகாகாசியில் தானம் பண்ணின பலன்
புண்ணியஞ் சேர்வார்கள் ௨

49. சிவமயம் அற்த்தனாரீசுரசுவாமியார் றட்சிப்பார் ௨

# ஆய்வுக் குறிப்பு

### ஓலை

ஒரு பட்டயத்தின் ஓலை நகல் இதுவாகும். ஐந்து ஓலைகள் உள்ளன. மொத்தம் 49 வரிகள் உள்ளன. திருச்செங்கோடு மலைக் காவலர் கோயில் பூசாரியர் திரு. சுப்பிரமணியம் அவர்களது ஓலை. பார்த்து படித்து எழுதியவர் பெ. அர்த்தநாரீசுவரன் ஆ௨ ர்.

### பாடல் தொடக்கம்

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன் னெறிதான் தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீரு சிறக்கவே

### கோயில் மெய்கீர்த்தி

3வரி முதல் 25வரி வரை கோயில் மெய்கீர்த்தி ஆகும் அர்த்தா நாரீசுபரர், வேலவர் புகழ் பேசும் பகுதிகள். "சுப்பிரமணிய சாமி யார் திருவுளப் படிக்கி" என்பதன் முன்னுரை

### மன்னர் மெய்கீர்த்தி

25வரி முதல் 34வரி முடிய மன்னர் மெய்கீர்த்தி ஆகும் கட்டாரிச் சாளுவர் குலம் குறிக்கப்படுகின்றது. அல்லாள இளையான் பட்டயத் துடன் ஒப்பிட்டுக்காண்க.

### காலம்

சுபகிருது வருஷம், வைகாசி மாதம், விசாக நட்சத்திரத்தில் எழுதப்பட்டது. கி. பி. 1722 ஆக இருக்கலாம்..

### கொடை

பனிமலைக் காவலர் கோயில் பூசை செய்கின்ற நல்லதம்பிப் பண்டாரம் ஏற ருளமுத்து துலுக்கப் பூசாரிக்கு நிலவந்தம் அளிக்கப்

படுகிறது. வேலவருக்கு திருமலைக் கட்டளை நடத்தி வர வேண்டும். வீட்டிற்கு ஐந்து பணம் தருவதென்று முடிவாகின்றது. அப்போது புழக்கத்தில் இருந்தது வீரராயன் பணம் ஆகும்.

### கொடையாளர்கள்

கண்ணிவாடி, கண்ணியூர், கண்ணன் குலத்துதித்த செங்கோட கவுண்டர், அர்த்தநாரிக் கவுண்டர், குமர கவுண்டர், சின்னய்ய கவுண்டர், சென்னிமலைக் கவுண்டர், சுப்பிரமணியக் கவுண்டர், துலுக்க கவுண்டர், பழ மடம் அர்த்தாரீக் கவுண்டர் ஆகியோர்.

### நன்மை தீமை

தற்மம் நிறைவேற்றுவோர் நல்லது பெறுதலும். அதனை அழிப்போர் வசவு பெறுதலும் கூறப்படுகிறது.

### இறுதி

''சிவமயம், அறத்தனாரீசு வர சுவாமியார் றட்சிப்பார்'' என நிறைவுறுகின்றது.



# அரைய நாட்டுப் பட்டயம்

## மூல பாடம்

### முதல் ஏடு

ஹரி ஓம் நன்றாக, குருவாழ்க, குருவே துணை.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன் னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீரு சிறக்கவே

அருள் கிருபையால் ஆதிநந்திகேசன் அனுக்கிரத்து திருவாய் மலர்ந்தருளின படிக்கு[1] கிரேதா, திரேதா, துவாபர, கலியுக, கிரோத யுகத்தில் பிரம்ம அர்ச்சனை பண்ணுகையில் பிரம்ம கிரியும், பிரம்ம தீர்த்தமும், பிரம்மஈசரும், திரேதா யுகத்தில் விஷ்ணு அர்ச்சனை பண்ணுகையில் துர்க்கா கிரியும், துர்க்கா தீர்த்தமும், துர்க்கா ஈசரும், கலியுகத்தில் நாக அர்ச்சனை பண்ணுகையில், நாக கிரியும், நாக தீர்த்தமும், நாக ஈசரும் [ஆக] இப்படி அநேக சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவதேவன்,[2] தேவ சிகாமணி, தேவாதி தேவ சொரூபமான பக்திப் பிரியன், பக்தவச்சலன், பார்வதி வல்லவன்,

---

1. நான்கு யுகங்களில் ஒன்றான கிரேதா யுகத்தில் எனக் கொள்க.
2. சிவனார் பெருமைகள்

பார்வதி பிராண நாயகன். முத்திக்கு வித்து முக்கண் ஈஸ்வரன், அழகிய நிர்மலன் பஞ்சவர்ணப் பிரகாசன். திருமுகப் பொலிவும், தெண்டாயுத அடித்தண்டும், [உடையவர்] சம்புத் தீவின், திராவிட தேசத்தின், தொண்டை மண்டலத்தில் காஞ்சி மா நகரில் திருக் கமலாலயத்தில் அர்த்த பாகம் பெற வேண்டி அருந்தபசு பண்ணுகை யில் காட்சி கொடுத்தருளிய கொங்கு மண்டலத்தில்

## இரண்டாவது ஏடு

தட்சிண கைலாசம் என்கின்ற ஸ்ரீ நாகபருவதத்தில் அர்த்த நாரி ஈசுபரனுடைய தம்பிரான், அருடைய ஸ்ரீமந் குமாராகிய விப்பிரப் பிரியன்,[3] விசுவமூர்த்தி, சிவபாலன், சரவண பவன், குக்குடத் துவசன், குங்குமு வண்ணன், கௌரி திருமகன், கணபதி சகோதரன், சாலோக ரட்சகன், தேவர் சிறை மீட்ட தேவசேனாதிபதி, பத்தரைப் பாராட்டர்க்காக பட்டிஇடபத் தைக் காக்க, வீரு கொக்கரித்து மாக் களித்த குக்குடத் துவசத்தில் சக்தி வட்டம் ஒட்டி இரட்டித் தவிசர் காவடிக்கும் பிரதாப துங்கன், வள்ளி தெய்வயானை மனோகரன் சிருஷ்டிக்கும் பிருமாவான [வரின்] அச்சரசுருதியில் திண்டாட குட்டைக் குடுமியை நெட்டை வாங்கும் கொண்டிராய துட்டச் சமணரை கழுமிசை வைத்த சுப்ரமணிய சுவாமியார் திருவுளப்பக்கு[4]

சுபஸ்ரீமந் மகாமண்டலேசர் ஆன ஆரிய கண்டன் மூவாரிய கண்டன் முதலாரிய கண்டன் மேதினி மீசூரிய கண்டன் சமர்கொல் காலன் வீரக்குஞ்சுகன் மேதினி வாவலன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் ஒரு குடைக்கீழ் உலகம் முழுதாண்ட இராசாதிராச பரமேசுரன் இராச மார்த்தாண்டன் இராச புங்கவன் இராச நாராயணன் இராசகேசரி அசுபதிகெசபதி நரபதி நவகோடி நாராயணன் பூர்வ தச்சின பச்சிம உத்திர சத்தசமுத்திராதிபதி எம்மண்டலமும் திரை கொண்டருளிய இராச பிரதாபனார் இராசர் கள் தம்பிரான் துளசிகா தல விபாடன் துலுக்கர் மோகாந்த வித்தன் ஒட்டியர் தலவிபாடன் ஒட்டியர் மோகாந்த வித்தன் ஈழமும் இலங்கையும் யாட்பானமும் வங்காள தேசமும் கொண்ட ருளிய தொண்டை மண்டலம் சோழமண்டலம் பாண்டி மண்டலம் கொங்கு மண்டலப் பிரதிஷ்டா சாரியான களத் தேவரெடுத்து போர் கலங்கும் இராய கண்டன் இரந்தோம் என நடந்தவர்க்கு இல்லை என்பது.

---

3. செங்கோட்டு வேலவர் பெருமைகள்
4. இதுவரை ஈசன், முருகன் பெருமைகள் கூறப்பட்டன. இனிவரு பவை அரசன் பெருமைகள்

முன்ருவது ஏடு

அறியாகண்டன் எண்திசா முகமும் பார்க்கும் இந்திரசுதானன் உபகடராய மகுடவிராயன் அஷ்டதிக்கும் மனோபயங்கரன் அஷ்ட லட்சுமி பொருந்திய மாராயன் கோட்டத்து மன்னிய கண்டன் நாறினமாலைபாடிய சங்கீதசாகித்திய நித்திய விநோதன் கெடி மன்னிய சுதானன் பூலோக தேவேந்திரன் இரணமுக சுத்த வீரன் சொல்தப்பா ஆரிய கண்டன் புண்டரீக புருஷோத்தமன் சகல சம்ரட்ச லட்சுமி சீனிவாச பூலோக நாயகன் பூமண்டலத்தீசன் சண்டப் பிர சண்டன் கண்டர்க்கு ஒரு கண்டன் சத்ருக்கள் மனவரசன் சமைய கம்பீரன் சமைய நாரயணன் சமைய துரோகா கண்டன் அஷ்டாசே பிரிய சம்மன்னன் சத்தியத்துக்கு அரிச்சத்திரன் அறிவுக்கு அகத் தீசுரன் பொறுமைக்கு தருமன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் ஞானத்துக்கு சகாதேவன் கரிமேல் உதையன் கொடைக்கு கர்ணன் படைக்கு இராமன் கோபத்துக்குகலாக்னி குளிர்ச்சிக்கு சந்திரன் அழகுக்கு மன்மதன் உக்கிரத்துக் நரசிங்கம் தேசத்துக்கு மார்த்தாண்டன் அபிமானத்துக்கு அத்திரி ஆண்மைக்கு கார்த்திகேயன் ஆயுசுக்கு பிரமன் சிங்காரத்துக்கு திருமால் போகத் துக்கு இந்திரன் பிரதிக்கினைக்கு பரசுராமன் பிரபைக்கு சூரியன் ஆசாரத்துக்கு வதிட்டன் குலத்துக்கு விக்கிரமாதித்தன் தைரியத் துக்கு சகூர்த்தி கம்பீரத்துக்கு சுமந்திரன் சங்கீதத்துக்கு தும்புரு சாத்திரத்துக்கு வான்மீகி காரியத்துக்கு அனுமான் பிரதாபத்துக்கு தச கண்டன் பிரதானிக்கு

நான்காவது ஏடு

சுகியிகுரதன் நீதிக்கு சாணக்கியன் காவியத்துக்குக் காளி தாசன் உசிதத்துக்கு போசராசன் பிறசகடகுக்ஷேன யுக்திக்கு விசு வாமித்திரன் சாந்திக்கு குமரன் சௌந்தரியத்துக்கு வள்ளேந்திரர் சுத்திக்கு பாகவர் புத்திக்கு விபூஷணர் மதிக்கு சரசுவதி சதிக்கு பாஞ் சாலி சிங்காரத்துக்கு நலகோபன் பிரதாபத் வக்கு இலட்சுமணன் உத்திரத்துக்கு குரு புத்திர தீரத்துக்கு இராசத்துவாரகிரிபாலர் பருவதப் பிரவேசர் சப்த சயத்ரத்துக்கு குலதீபகர் இத்தனைக்கும் வல்லவராய் சத்தசாகரமும் ஒரு குடைக் கீழ் ஆண்டு ஒரு நீயாய் சட்ட அரசாளும் விருப்பாட்சிராயர் வீர்ய சந்தராயர் போசர வீர நரசிங்க தேவ மகாரயர் தன்மராயர் பூபதிராயர் அகலங்க தேவ மகா ராயர் தெய்வராயர் செகபதிராயர் கஜதுபராயர் கம்பாராயர் பிரபு தேவ மகாராயர் வல்லாளராயர் சம்மட்டிராயர் கொடுபுலி தேவ மகாராயர்.

உச்சமல்லி தேவமகாராயர் விசையராயர் வல்லபராயர் பவநந்தி தேவ மகாராயர் சதாசிவ மகாராயர் சொக்கநாத நாயக்க மகாராயர்

கிருஷ்ண தேவ மகாராயர் புசபல வேத மகாராயர் சீரங்க ராயர் மல்லிகார்ச்சுன ராயர் [வேங்கடபதி ராயர் இராமதேவ மகாராயர் வீரவிக்கிரம தேவ

## ஐந்தாவது ஏடு

மகாராயர் பிரிதிவி ராச்சிய பாரம் பண்ணி அருளாநின்ற வீர லட்சுமி விசயலட்சுமி(யின்) விசுவாச வீரப்ப நாயக்கர் அற்சுதப்ப நாயக்கர் முத்து வீரப்ப நாயக்கர் திருமலை நாயக்கர் ஆனவர்களின் நாளில் கலியுக சகாத்தம் (4518)க்கு செல்லா நின்ற ஆனந்த வருஷம் வைகாசி மாதம் உயரு (25) தேதி சுக்கிர வாரம் விசாக நட்சத்திரமும் சஷ்டி திதியும் பெற்ற சுபதினத்தில் ஊத்தலூர் பட்டக்காரரும் தாராபுரம் பட்டக்கரரரும் ஈரோட்டு பட்டக்கர்ரும் ஆக மூன்று பட்டமும் மேல்கரை உயச (24) நாடும் கீழ்கரை எழு கரை நாடும் வந்துகூடி தட்சிண கைலாசமாகிய நாககிரி சூழ்ந்த திருச்செங்கோட்டுத் தலத்தில் வாசமாய் எழுந்தருளிய பரிமளவல்லி ஆதி கைலாசநாத சுவாமி சன்னதி முன்பாக அர்த்தநாரீசர் கிருபை யால் கொங்களாயி அம்மன் கிருபையால் கடாஷம் பெற ஈரோட்டில் இருக்கும் திரு நீலகண்ட பக்தர் காளியண்ணன் செட்டியண்ணன் பெரியண்ணன் ஆகிய நாங்கள் மூன்று பேரும் அறைய நாட்டு கொடு முடி ஊரிலிருந்து திருச்செங்கோட்டிற்கு வந்த திரு நீலகண்ட பக்த ராகிய வேலப்பன் மலையப்பன் காளியக்காள் மூன்று பேருக்கும் திருமண காணியாக ஊர்காணிக்கும் கிராம காணிக்கும் தர்ம சாதன பட்டயம் கொடுத்த படி பட்டயத்து விபரமாவது நாடும் பட்ட மும் நம் உறவின் முறை ஆனவரும் கூடிய உறவின் முறை தெய்வச் சபையில் இராசர்கள் அரண்மனையார் அதிகாரிகள் மேல்படிதர குருக்கள் மார்கள் செட்டி வர்த்தகர் பல பட்டரையார் அனைவரும்

## ஆறாவது ஏடு

அறிய திருநீலகண்ட சுவாமிகள் திருவுளபடிக்கு கொடுமுடி மகுடலிங்க சன்னதியிலிருந்து வந்த திருவம்பலத்தடி தேவரடியாள் உமையாயிக்கு திருச்செங்கோட்டில் கோவில் சேவகமாகி சுவாமிக்கு நாட்டியம் புரிந்து கொண்டு குடியிருக்கும் போது தன் சொந்த ஊரான கொடுமுடிக்கு போகவர இருக்க அந்தவூர் திரு நீலகண்ட பக்தர் பொன் காளியண்ணன் தாயார் பெருங்காளியம்மாள் இவர் கள் மக்களாகிய வேலப்பன் மலையப்பன் இவர்கள் இரண்டுபேர் மாத்திரம் இருக்க மற்ற தாயார் தகப்பனார் அண்ணன் தம்பி வளவுச்சனங்கள அனைவரும் இறந்துபோய் ஒருவர் ஆதரவும் இல் லாது இருப்பதனால் அதை இந்த உமையாயிகண்டு தன் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருந்த வீட்டுச் சனமான படியினாலே அழைத்துக்

கொண்டு திருச்செங்கோட்டிற்கு கூட்டி வந்து அந்த பையன்கள் இரண்டு பேரையும் வளர்த்து பள்ளிக் கூடத்தில் வைத்து படிப்பித்து விவேகசாலி ஆக்கியதற்கும் பிற்பாடு உங்கள் சாதித்தொழில் வர வேண்டுமே அதற்கு உங்கள் (சாதித் தொழில்) உயுக்தியினாலே நம் முடைய வீட்டில் இருக்கிற பானை சட்டி குடம் குருது ஆகிய வைகளைப் பார்த்தும் கோவில் வேலை குதிரைகள் முதலாகியதும் பார்த்து பண்ணச் சொல்லி அப்படியே அந்த சேவைகள் எல்லாம் செய்து பழகிக் கொண்டு பதினெட்டு வயது வாலைக் குமாரராயிருக்க கலியாணம் பண்ண வேண்டும் என்று நியமிக்கும்போது அந்த உமையாயியை வைப்பாக வைத்திருக்கப்பட்ட மோரூர் நாட்டுக் கவுண்டர் அவர்கள் கேட்டு யோசனை பண்ணு மிடத்தில் அந்த கவுண்டரவர்கள் இந்தப் பிள்ளையாண்டான்களை அழைத்து உங்கள்

ஏழாவது ஏடு

மாமனாகியவர் யாரென்று கேட்க ஈரோட்டிலே இருக்குறவர் கள் என்று சொல்ல அந்த உமையாயி அந்தக் கவுண்டர் அவர் களையும் கூட்டி கொண்டு போய் ஈரோட்டில் இறங்கிக் கொண்டு அவர்களை அழைத்து இந்த விருத்தங்கள் எல்லாம் சொல்லி பெண் கொடுக்கும்படிக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் அப்படியே ஆகட்டுமென்று எங்கள் சாதித்தொழில் அறிந்திருந்தால் பெண் கொடுக்கிறோம் என்று சொல்லி இந்தப் பிள்ளையாண்டான்கள் வேலைசெய்கிறதும் குதிரை யானை சுவாமிகள் முதலாகிய வேலை கள் செய்வதையும் பார்த்து அவர்கள் கையினாலே கொங்களாயி அம்மனுக்கு வெகுவெகு உச்சிதமான உருவுகள் செய்வித்ததும் கண்டு சந்தோஷப்பட்டு கொண்டு உரிமைப் பெண் கொடுப்பதற்கு அவர்கள் வீட்டில் ஒருபெண் வெள்ளை நிறமாய்ப் பிறந்து இருந்தது அந்தப் பெண்ணை வெகுநாட்களாய் உறவின் முறையார் (திருமணம் செய்து) கொள்ளாமல் சும்மா இருந்தது. அந்தப் பெண்ணை கொடுக்கிறோம் என்று சம்மதப்பட்டதற்கு உமையாயும் மயில் கவுண்டர் அவர்களும் ஆலோசித்துஉரிமை ஆனபடியினாலே நீங்கள் இந்த பெண்ணை கொடுத்தாலும் உரிமைக்காரன் கொள்ள வேண்டிய ஞாயம் சரி, அப்படியே கலியாணம் பண்ணிக் கொள்கிறோம் இந்த பெண்ணும் மாப்பிள்ளையும் பிழைக்கும் பொருட்டாய் நீங்கள் ஒரு சகாயம் பண்ணவேண்டும், பெண்ணும் கொடுத்து ஊரும் கொடுத்து காணியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அப்படியே அனைவரும் சந்தோஷமாகி கலியாணம் நியமித்து உமையாயி மயில் கவுண்டர் அவர்களும் பத்துநாள் வரைக்குமிருந்து சகலமான செலவும் போட்டு பெண்வீட்டுக்காரன் சொன்னபடிக்கு செலவும் செய்து கலியாணம் முடித்து

## எட்டாவது ஏடு

கொண்டு பெண்ணையும் மாப்பிள்ளையையும் பல்லக்கின் மேல் ஏற்றிக் கொண்டு திருச்சங்கோட்டிற்கு வந்து வீதிமொரவினை செய்து சகலமான சனங்களும் அறிய கைலாசநாத சுவாமி சன்னதி முன்பாக இருந்துகொண்டு பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் சரிபாதி திருச் செங்கோடு குமரமங்கலம் திருமங்கலம் உஞ்சனை சித்தளந்தூர் சிறு மொலசி அனிமூர் ஆகிய ஏழு கிராமமும் ஊரும் காணியாய் கொடுத்து குடிவைத்து காணிக்கு தர்மசாதனப் பட்டயமாய் எழுதிக் கொடுத்து புத்திரகோத்திர பரியந்தம் பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் நீங்கள் அனுபவித்துக் கொண்டு சிரஞ்சீவியாய் மகாராசராய் இருங்கள் என்று சொல்லிக் கொடுத்தார்கள். அந்தபட்டயத்தை வாங்கிக் கொண்டு இத்த பெண் மாப்பிள்ளை சொல்படி கேட்டு உமையாயி மயில் கவுண்டர் அவர்கள் கூடச் சொல்லி மாப்பிள்ளையுடைய மாமனார் மூன்று பேருக்கும் நாடும் பட்டமும் இருக்கப்பட்ட உற வின் முறையாருக்கும் வெகுமதி சோமன் துப்பட்டியும் உறவின் முறை விருந்தும் நடத்துவித்து இந்த தருமமான கலியாணத்துக்கும் சாசனத்துக்கும் அர்த்தநாரீஸ்வர சுவாமி அறிய ஈரோட்டு கொங்களாயி அம்மன் அறிய கல்லும் காடும் பொருந்திய ஆகாச பூமி அறிய சந்திர சூரியர்கள் அறிய முப்பத்து முக்கோடி தேவர் கள் அறிய நாற்பது எண்ணாயிர ரிஷிகள் அறிய நவகோடி சித்தர் அறிய சத்தேழு கன்னிகள் அறிய அருந்ததி அறிய பஞ்சபாண்ட வர்கள் அறிய துரோபதை அம்மன் அறிய மதுரை மீனாட்சி அறிய பவானி வேதநாயகி அம்மன் அறிய கூடு துறை காசி கங்கை அறிய திருப்பதி வெங்கடாசலபதி அறிய தென்பழனி ஆண்டவர்

## ஒன்பதாவது ஏடு

அறிய ஸ்ரீரங்க நாதரறிய சிதம்பரம் ஸ்ரீ சிவகாமி அம்மன் அறிய காஞ்சீபுரம் காமாட்சி அம்மன் அறிய பிரம்ம விஷ்ணு ருத்ர மும் மூர்த்திகள் அறிய திருநீல கண்ட சுவாமிகள் திருப்பாதம் அறிய சத்தியமாய் நாங்கள் மூன்றுபேரும் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் மண்ணும் காணியாய் கொடுத்து ஊரும் கொடுத்து பெண்ணும் கொடுத்து காணிக்குச் சாதனப் பட்டயமும் எழுதிக்கொடுத்து இதை பரிபாலனம் பண்ணிக் கொண்டு புத்திர கோத்திர பரியந்தம் நீங்களே அனுபவித்துக் கொண்டு தீர்க்காயுசாய் நீடுழி காலம் சுகமாய் வாழ்ந்து இருக்க வேண்டியது. சுபம். இது மயில் கவுண்டன் கையெழுத்து.

சுபம்.

## புலவர் குறிப்பு

இந்த சாசனத்தின் மூலமாகிய செப்பேட்டின் முதல் ஏட்டில் முதல்பக்கம் வரிகள் எட்டு. அடுத்த பக்கம் வரிகள் எட்டு இரண்டாவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் ஒன்பது அடுத்த பக்கம் வரிகள் எட்டு. மூன்ருவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் எட்டு. அடுத்தபக்கம் வரிகள் எட்டு நான்காவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் ஏழு அடுத்த பக்கம் வரிகள் ஏழு. ஐந்தாவது ஏட்டில் முதல்பக்கம் வரிகள் எட்டு அடுத்த பக்கம் வரிகள் எட்டு. ஆறாவது ஏட்டில் முதல்பக்கம் வரிகள் எட்டு, அடுத்த பக்கம் வரிகள் ஒன்பது. ஏழாவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் ஒன்பது, அடுத்தபக்கம் வரிகள் ஒன்பது. எட்டாவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் எட்டு, அடுத்த பக்கம் வரிகள் ஒன்பது. ஒன்பதாவது ஏட்டில் வரிகள் எட்டு. அடுத்தபக்கம் எழுத்தில்லை. எனவே இதன் ஏடு ஒன்பது. அவற்றின் பக்கம் பதினேழு. வரிகள் நூற்று நாற்பது.

### பட்டயம் கொடுக்கப்பட்ட இடம்

நாககிரி சூழ்ந்த திருசெங்கோட்டுத் தலமாகிய அர்த்த நாரீஸ்வரன் எழுந்தருளியுள்ள மலையின் கீழ் உள்ள பரிமளவல்லி கைலாச நாதர் குடிகொண்டுள்ள நிலத்தம்பிரான் சன்னதி முன் கொடுக்கப் பட்டது.

### பட்டயம் கொடுக்கப்பட்ட காலம்:—

கலியுகாதி வருடம் 4503, பிலவ வருடத்திய ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கத்தின்படிக்கு இன்று கலியுகாதி வருடம் 5063 என்று அறியப்படுவதால், 560 வருடங்கள் நடந்துள்ளன. கி.பி. 1401 தமிழ் ஆனந்த வருடம் வைகாசி மாதம் 25ந் தேதி வெள்ளிக் கிழமை, விசாக நட்சத்திரம், சஷ்டி திதியும் கூடிய சுபதினம்,

**பட்டயம் கொடுக்கப்பட்டதன் முறை:—**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேல்க்கரை பூந்துறை நாட்டைச் சேர்ந்த ஈரோட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட காளியண்ணன், செட்டியண்ணன், பெரியண்ணன் என்ற மூவரும் தங்கள் நாட்டைச்சேர்ந்த திருசெங்கோடு, கொமரமங்கலம், உஞ்சனை, திருமங்கலம், சித்தலந்தூர், சிறுமொலசி, அனிமூர் ஆகிய ஏழு கிராமங்களும், அவைகளைச் சேர்ந்த ஊர்களும், மண்ணும், குடிவைத்தனர் என்பதனால் இடமும் ஆகியவைகளை அரைய நாட்டைச்சேர்ந்த கொடுமுடியிலிருந்து வந்து திருச்செங் கோட்டில் இருந்த வேலப்பன் மலையப்பன் என்ற தங்கள் மரு மக்களுக்கும் திருமணக் காணியாகக் கொடுத்து பட்டயம் செய் துள்ளனர்.

**பட்டயத்தில் குறிப்பிடப்பட்டவர்கள்:—**

**பொன் காளியப்பன்:—**

இவர் வேலப்பன் மலையப்பன் என்பவர்களின் தகப்பனார். அரைய நாடாகிய கொடுமுடியைச் சேர்ந்தவர்

**பெருங்காளி யம்மாள்:—**

பொன்காளியப்பனின் மனைவி. வேலப்பன் மலையப்பன் என்பவர்களின் தாயார்,

**உமையாயி:—**

அறைய நாட்டில் உள்ள கொடுமுடியைச் சேர்ந்தவள் உமையாயி, திருச்செங்கோட்டுத் தல சேவகம் பெற்று தேவரடியாராக வாழ்ந்தவர். மோரூர் பட்டக்காரர் மயில் கவுண்டர் என்பவரின் காதல் மனையாள். வேலப்பன், மலையப்பன் ஆகிய அனாதை வேட்கோவப்பிள்ளைகளைக் காப்பாற்றி அவர்களுக்கு அவர் இனத் திலேயே திருமணம் செய்து வைத்த பரோபகாரி

**மயில் கவுண்டர்**

திருச்செங்கோட்டை அடுத்த மோரூர் கிராமத்தின் பட்டக் காரர். நாட்டுக் கவுண்டர். உமையாயி என்ற தேவரடியாரிடம்

காதல் கொண்டவர். அவ்வம்மையாரின் வளர்ப்பு பிள்ளைகளின் வகையை அறிந்து, அவர்களின் மாமன் வழியில் பெண்ணைத் திருமணம் செய்து வைத்து, அம்மான்மார்களின் உரிமை ஊர் கிராமம், ஆகியவைகளைப் பெற்று வேலப்பன் மலையப்பன் ஆகியவர்களுக்கு உரிமையாக்கும் பட்டயம் செய்து கொடுத்த உத்தமர்.

## இராயர்களும் நாயக்கர்களும்

விஜயநகர அரசு கி.பி. 1336ல் தோன்றியது. அது முதல் 250 ஆண்டுகள் இவ்வரசு நிலை பெற்றிருந்ததெனலாம். அச்காலங்களிலேயே இராயர்களும், நாயக்கர்களும் மிகச் சீரும் சிறப்புமாக நாட்டைப் போற்றி வந்தனர். நமது பட்டயத்தில் பல ராயர்களும், நாயக்கர்களும் கூறப்பட்டுள்ளனர். அவர்களில் பிரபுட தேவ மகாராயர், திருமலை நாயக்கர் என்பவர்கள், இவர்கள் ஆட்சி செய்த காலத்தில் கொடுக்கப்பட்டது இப்பட்டயம் என்ற குறிப்பிற்கும், கலியுகாதி வருடம் 4503 என்பதற்கும், காலம் ஒன்றாய்க் காணப்படுவதால் 560 வருடங்களுக்குமுன் தோற்றியது இப்பட்டயம் என்பது விளங்கும்.

## பொதுக் குறிப்புகள்

பூந்துரை நாட்டவர் அறைய நாட்டவர்களுக்கு மாமன் முறை உறவுடையவர்கள், பட்டயத்தில் காளியண்ணன், செட்டியண்ணன் பெரியண்ணன் என்ற பெயர்கள் கூறப்பட்டாலும் காளியண்ணன் பெயர் முதலில் கூறப்படுவதால் இப்பட்டயத்தின் மூலவர், முதல்வர் என்றும் கூறலாம். இம் மூலவரை மேற்படி பெண் காளியக்காளின் தந்தையாகவும் கருத இடமுண்டு. மற்ற இருவரும் இவர்களின் சகோதரர்களாகவிருக்கலாம். இக்காளியண்ணன் என்பவர் தனது சகோதரர்களை வைத்துக் கொண்டு மருமகமணக் காணிப்பட்டயம் கொடுத்துள்ளனர்.

பட்டயம் பெற்றுக் கொண்டவர் வேலப்பன். தன் சகோதரன் மலையப்பனையும் அருகில் வைத்துக் கொண்டு தனது மாமனாரிடம் பட்டயம் பெற்றிருப்பார். ஏனென்றால் பட்டயம் பெற்றவர்களைப் பற்றியும் அனாதைச் சிறுவர்களைப் பற்றியும் கூறப்படும் இடங்களில் வேலப்பன் மலையப்பன் என்று முதலில் உரிமைப் பெண் காளியக்காளைத் திருமணம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**சில தொடர் விளக்கமும் பொருளும்**

திருவாய் மலர்த்தருளினபடிக்கு; உத்தரவிட்டபடி.

துளசி + கா + தலம்; துளசிகாதலம்; திருவரங்கம்

யாடபானம், யாழ்பாணம்

ஈழம், சிங்களவர்கள் நாடு.

களம் + அத்து + தெவ் + அடுத்து; களத்தேவரடுத்து. போரில் பகைவர் முன நின்று.

சமைய துரோக கண்டன் — மததருமத்தைக் காப்பாற்றுபவன்.

சுகியிகுரதன் — நோயற்ற வாழ்வுடையவன்

வீட்டுச்சனம்—வீட்டில் உள்ள மக்கள்

வளவுச்சனம்—தெருவில் உள்ள மக்கள்

பிரமம் விஷ்ணு ருத்ரர்; ஆக்கல் அழித்தல் அளித்தல் ஆகிய செயல்களைச் செய்யும் மும்மூர்த்தி எனப் படுபவா.

சேவகம் — தேவ காரிய உரிமை (யுடையவர்) களைப் பெற்றுச் செய்தல்

ருத்ரன் — சிவன்

அனுகிரகித்து — கிருபை செய்து

சதுர்யுகம் — நான்கு ஊழிக்காலம் கிரேதா திரேதா துவாபர கலியுகம் என்பனவாகும்,

கிரி—மலை

மதி—அறிவு

பருவதம்—மலை

பரி—குதிரை

விப்பிரம்—விருப்பம் அல்லது மோகம்

சதி—கற்புடையாள்

குக்குடம்—கோழி

துவசம்—கொடி

சாலோகம்—கடவுளது உலகத்திருத்தல்

ரட்சகன்—காப்பாற்றுபவன்

இடபம்—எருது

காலாக்னி—ஊழிக் காலத் தீ

கருதி—ஓலை

மேதினி—உலகம்

# ஆய்வுக் குறிப்புகள்

## 1. அறிமுகம்

கொங்கு நாடு 24 பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் காவிரி ஆற்றின் இருகரையிலும் பகிர்ந்து, மேல்கரை அரைய நாடு, கீழ்கரை அரையர நாடு என்றவாறு இரண்டு பகுதிகளாக அமைந்தது அரையநாடு ஆகும். கீழ்கரை அரைய நாட்டைச் சேர்ந்த கொடுமுடியில் பிறந்த இரண்டு அனாதைச் சிறுவர்கள், திருமணக் காணியாக மேல்கரை அரைய நாட்டைச் சேர்ந்த திருச்செங் கோட்டைச் சுற்றியுள்ள ஏழுகிராமங்களி உரிமை பெற்ற வரலாற்றைக் கூறுகிறது இப் பட்டயம். எனவே அரையநாட்டார் பட்டயம் எனப் பெயரிடப் படுகின்றது.

## 2, இடம்

கொங்கு குலாலரிடையே நடை பெற்ற ஒரு வழக்கில் இப் பட்டயம் சான்று தரும் ஒரு ஆவணமாகச் சேலம் சார்நிலை நீதி மன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது. தற்போது திருச்செங் கோடு மண்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. சண்முகம் அவர்கள் வசம் உள்ளது.

## 3. காலம்

இப்பட்டயம் கிபி 1401 ஆம் ஆண்டு நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சி ஒன்றின் எழுத்து வடிவம் ஆகும்.

## 4. செய்தி

13, 14 ம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டுச் சமுதாயம் எவ்வாறு இருந்ததென்றறிய இப் பட்டயம் ஒரு முதன்மையான கருவி ஆகும்.

திருப்பாண்டிக் கொடுமுடியில் பிறந்து திருச் செங்கோட்டில் இறைபணி புரிந்த உமையாயி என்ற தாசிப் பெண்ணின் மனிதாபிமானம் இதனால் விளங்குகின்றது.

தனது பிறந்த ஊரான கொடுமுடியில் குயவர் குடியைச் சேர்ந்த பொங்காளியப்பன்—பெருங்காளியம்மாள் என்ற தம்பதியரும், அவரோடு சேர்ந்தவர்களும் அடுத்தடுத்துக் காலமாகி விட்டதால், அவர்களின் இரு புதல்வர்களான வேலப்பன், மலையப்பன் என்ற இரு சிறுவர்கள் அனாதை ஆகிவிட்டனர். அவர்களை உமையாயி எடுத்து வளர்த்துக் கல்வியும் நல்லறிவும் புகட்டுகிறாள். அத்துடன் அவர்களது குலத் தொழிலான மண்பாண்டங்கள் வனைதல், கோயில்களுக்கு உருவங்கள், குதிரைகள் செய்வதில் பயிற்சி பெறவும் ஏற்பாடு செய்கின்றாள். அவர்கள் காளைப்பருவம் பெற்றதும் திருமணத்திற்கும் ஏற்பாடு செய்கிறாள்.

திருச் செங்கோட்டிற்கு அருகில் உள்ள மோரூர், எழுகரை நாட்டின் தலைநகரம் ஆகும். அங்கு வாழ்ந்த மயில் கவுண்டர் அவர்களின் காதல் கிழத்தியாக உமையாயி இருந்தாள். உமையாயியின் வேண்டுகோளை ஏற்று, இந்த அனாதைச் சிறுவர்கள் திருமணத்தை நடத்த ஆவன செய்கிறார்.

ஈரோட்டில் வாழ்ந்த, குலாலர்களில் பூந்துறை நாட்டைச் சேர்ந்த காளியண்ணன், செட்டியண்ணன், பெரியண்ணன் ஆகியோரை வரவழைத்துப் பெண் கேட்கின்றார். அவர்கள் வீட்டில், பருவமெய்திய நிலையில் வெள்ளை பூத்த காளியக்காள் என்ற பெண் செல்வழியில்லாமல் நின்றது. அப்பெண்ணை மணம்பேசி அனைவரும் ஒப்புக் கொண்டபடி வேலப்பனுக்கும் காளியக்காளுக்கும், திருச்செங்கோடு நகரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணமான வேலப்பன், தனது தம்பி மலையப்பனோடும் மனையாள் காளியக்காளோடும், பிழைப்பதற்கு வழியாக ஏழுகிராமங்களின் கொசபாடு பெறுகின்றனர்.

## 5. சிறப்பு

கொங்கு நாட்டுச் சமுதாயத்தில் சில கூறுகளை இதில் அறிகின்றோம். கோயில் சேவகம் செய்கின்ற உமையாயி என்ற பெண் தனது காதல் கொழுநர் மோரூர் மயில் கவுண்டர் அவர்களின்

செல்வாக்கைப் பயன்படுத்தி தான் வளர்த்த அனாதைச் சிறுவர் களுக்கு அவர்களின் குடியிலேயே பெண் எடுத்து குடியும் குடித்தன முமாக அமர்த்துகிறார். அந்தச் சிறுவர்களின் வழித் தோன்றல்கள் அந்தச் செங்கோட்டு வேலவனின் அருளால் சீரோடும் பல்கிப் பெருகியுள்ளனர்.

## 6. கொங்கு குலாலர்

மண் ஏனங்கள் செய்து வாழும் தொழிலாளர்கள் குயவர்கள் எனப்படுவர். குயவர்கள் என்பதன் மறுபெயரே குலாலர் ஆகும். இவர்களின் வரலாறு கூறுபவையாகத் தேனோலை இதழில் மதுக் கரைப்பட்டயம், 24நாட்டுப்பட்டயம், சென்மப்புலவன் பட்டயம், ஆகியவை ஏற்கனவே வெளிவந்துள்ளன.

பெரிய புராணத்தில், தில்லைவாழ் அந்தணர் என்ற தொகைப் பெயருக்கு அடுத்துத் தனிப்பெயராகக் கூறப்படும் முதல் அடியார் திரு நீலகண்டர் இவர்களின் குலமுதல்வர் ஆவர். சங்ககாலப் புலவர் கோவூர் கிழார் "நன்மதி வேட்கோச்சிறார்" என இக்குல இளவல் களைக் கூறிமகிழ்கின்றார். [1]"கலம் செய்கோ" என்று பல இடங்களில் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இராசராச சோழனின் பட்டயங்களில் சோழநாட்டின் பல ஊர்களுக்கு இம்மரபினர் கர்ணம் (கணக்குப்பிள்ளை) ஆகப்பணி யாற்றிய செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.

[2]தொன்று தொட்டு அறிவு மேம்பாடுடைய குடிகளாக இருந் துள்ளமையைத் தமிழ் இலக்கியமும், வரலாறும் அறிந்தார் உணர் வர்.

தற்காலம் இவர்களின் சமுதாயச் செய்தி மடலாக "இளங்கோ" என்ற திங்களிதழ் சென்னையிலிருந்து நடை பெற்று வருகின்றது.

## 7. படித்தவர்

நீதி மன்றத்தில் சாட்சிப் பொருளாக வைத்தல் வேண்டி, இப் பட்டயத்தைப் படித்துப் பிரதி செய்து, சிறுவிளக்கமும், எழுதியவர் திருச்செங்கோடு மகாதேவ வித்தியாலயம் உயர்நிலைப் பள்ளியின்

தமிழாசிரியர் திரு நாராயணசாமி அவர்கள் ஆவார். அவரது பணியினைப் பாராட்டும் பொருட்டு, அவர் எழுதி யளித்த வாக்கிலேயே இப்பட்டயம் பதிப்பிக்கப்படுகிறது. முதலில் தேனோலை 18-ஆம் இதழில் (1977 சூலை) வெளியாயிற்று.

## 8. இறுதியில்

பட்டயத்தை நேரில் கண்டு மேலாய்வு செய்ய விழைவோர் தேனோலை ஆசிரியரை அணுகலாம். ஒரு தொடர்கதை எழுதுவதற் கேற்ற கதைக்கரு கொண்ட உண்மை நிகழ்ச்சி இப்பட்டயம் எனில் மிகையாகாது.

# மோரூர்க் காங்கேயர் ஏடு

ஸ்ரீமத் நந்திகேசுபர சுவாமியார் அனுக்கிரகத்தாலே திருவாய் மொழிந்த படிக்கு அநேகம் சதுயுகம் பூசை கொண்டருளிய தேவாதி தேவன் தேவ உத்தமன பத்திப் பிரியன் பத்தய சாசனன் பார்வதி மணாளன் திருபொஷ்கரணி முக்கணீசுவரன் நின்ற கோலமழகிய நிமலன் நிறமொரு பஞ்சவர்ணப் பிரகாசன் தெண்டாயுத அஸ்தன்

செம்புத் தீவில் திராவிட தேசத்தில் தொண்டை மண்டலத்தில் காஞ்சி மா நகரில் திருக்கம்பையாற்றில் பார்வதி தேவியம்மன் அர்த்த பாகம் பெறவேண்டி அரியதபசு பண்ணுகையில் வாமபாகம் பெத் தருளிய அம்மன் வீரபாகுவைப் பார்த்து நீங்கள் ஆறுபேரும் தேவர் சேனையை மீட்டபடியினாலே உங்களுக்கு அரவகிரியைச் சூழ்ந்த எளுகரை நாட்டுக்கும் கொங்கனனென்றும் பேருமிட்டு பட்டாபிஷேகம் சூட்டுகிறேனென்று அம்மன் கட்டளையிட்டபடிக்கு கொங்கு மண்டலத்திலே தெட்சின கைலாசமாகிய அரவகிரியைச் சூழ்ந்த எழுகரை நாடெனும் காவேரி பவானி திருமணி முத்தா நதி அழகு முரிச்சான் தொப்பை ஆம்பிராந்தி நொய்யல் ஆக சத்த நதியாகிய எழுகரை நாட்டிலுள்ள சிவசந்நதிகளும்

பூந்துறை நாடு பூவாணி நாடு வஞ்சி நாடு சேல நாடு இராசிபுர நாடு பருத்திப் பள்ளிநாடு எழூர்நாடு வாழவந்தி நாடு அரைய நாடு மற்று முண்டான சிவசந்நிதி நாடு உறவின் முறையாரும்

குடிபிரிதி சிட்ட பரிபாலனம் பண்ணி அருளா நின்ற திருவளம் வீரலட்சுமி விசயலட்சுமி வாசராகிய களம் வம்முச பரிபாலராகிய ஆதி கன்னிவாடி அறுபது காங்கேய ரோட அறுபது கரண காங் கேயன் என்னு இடங்கை பட்டமுத்து நல்லய்யன் குமாரன் நல்லய் யன் மோருரு காணி

துந்துபி வருஷம் ஆவணி மாதம் இருபத்தைந்தாந்தியதி திங்கட் கிழமை சப்தமி திருவோண நட்சத்திரத்தில்

அறுபது காங்கேயனுக்கு வெகுநாளாய் பிள்ளையில்லாமல் அறுபது கருண காங்கயனென்று வந்த நல்லய்யன் குமாரன் நல்லய்யன் அறுபது காங்கையனுக்குப் பிள்ளைவரம் வேண்டி நல்ல புள்ளியம்மன் சந்நதி முன்பாக பச்சைப் பார்ப்பான் னெரிவி செய்து வைரர்ககியம் செய்து தன் கெரசினை இருதுண்டாக வெட்டி செயங்கொண்ட குமாரன் நல்லய்யன் பேரிலே சந்தோசமாகி பின்பு அறுபது காங்கேயனுக்கு என்ன வேண்டுமென்று கேட்க

தேவரீர் நமக்குக் கன்னிவாடியில் இடங்கைக்குட்பட்டது நடந்த மேரைக்கு வடக்கிலேயும் நடப்பிக்க வேணும் தேவரீர் என்று கேட்க

அப்படியே தருகிறோமென்றுகையில் கீழ்கரைப் பூந்துறை நாட்டில் அரவகிரியில் அறுபது கரண காங்கயரும் செங்குந்த கோத்திர உறவின் முறையாரும் இடங்கை முதலான உறவின் முறையாரும்

ருத்ரோத்காரி வருஷம் புரட்டாசி மாதம் சனிக்கிழமை பதினைந்தாந் தியதி சனிக்கிழமை மாளிகைபிச்சம் உத்தர நட்சத்திரம் இந்தச் சுபதினத்தில் கூடி

முருகாவுடையார் சந்நிதி இந்திர விமானத்தேர் முன்பாக இருப்பு முக்காலி வைத்து ஆசாரஞ் செய்து பன்னிரண்டு சுமைபோட்டு அக்கினி எரியவிட்டு அறுபது கரண காங்கயனை அதின்மேலே இருத்தி ஆண்டவர் கிட்டந் தரித்து பட்டம் வைத்தும் குருக்கள் மார் ஆறு பேரும் கும்பாபிஷேகம் பண்ணி அட்சதை தாம்பூலம் குடுத்து

இனிமேல் செங்குந்த கோத்திரத்திற்கு நடக்கவேண்டிய சாதி ஞாயம் அர்த்தபாகம் முன்பாக கட்டளை இட்டோம். சொன்ன விபரமாவது விசாரிக்கும்போது அடிகரை பணம் ஆறு வைத்து மேல் ஞாயம் பேசவும் செங்குந்தர் குத்தத்துக்கு அவுதாரம் பணம் பண்ணிரண்டு வாங்கக் கட்டளையிட்டார்

காராளர் காணிக்கை ஏருக்கு கால் பொன்னும் செங்குந்த சாதிகள் மக்கத்துக்கு வராகன் கால், தேவடியாளுக்கு மூக்குத்திக்குப் பணம் மூன்று, கண்ணாளர் அரசுக்குச் சாதிக்குதலைக் கட்டுக்குப் பணம் ஒன்று, வன்னியகுலத்தார் மோழிக்குப் பணம் ஒன்று, சிவுப்

பிராமணர் அரிசிப்படிச் செலவு விசாரிக்கும் விபரம் நகரத்துச் செட்டிக்குக் குடிப்பணம் ஒன்று பகடை பட்டரைக்குப் பணம் இரண்டு

இந்தப் பிரகாரம் கட்டளையிட்டு எழுகரை நாடும் கூடி செப்பேடு சாசனப் பட்டயம் எழுதிக்கொடுத்த பிரகாரம் சகலமான பேரும் தெரியப் பல்லக்கு மேலே வைத்து குதிரை தீவட்டி சூரியபானு பதினெட்டு விருது கொடுத்து வீதி மெரவனை பண்ணி வைத்து மேள வாத்தியத்துடனே மண்டபத்திலே வச்சு இந்த அர்த்தபாகம் அறிய ஆறும் பண்ணிரண்டும் உன்னுதென்று அனைவரும் திருவாக்குக் கொடுத்து அடிபணிந்தார்கள்.

அர்த்தபாகம் சந்திர சூரியர் நல்லபுள்ளியம்மன் பாதம் அறிய இதுக்கு ஆரொருவன் அனாத்தியம் பண்ணினவர்கள் வம்சமும் அழிந்து அழிஞ்சி போயும் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ன தோஷத்தில் போவானாக. மாதா பிதாவைக் கொன்ன தோஷத்தில் போவானாக. குருவுக்கு ரண்டகம் பண்ணின தோஷத்தில் போகக் கடவாராக. அரிபூசை சிவபூசை குருபூசை மகேசுவர பூசை தடுத்தவர்கள் போற நரகத்தில் போகக்கடவாராக. ஸ்ரீவதை சிசுவதை பண்ணின தோஷத்தில் போகக்கடவாராக. இனிமேல் வரப்பட்ட காலா காலங்களுக்கும் யுகங்களுக்கும் இந்த பட்டத்துக்கு ரண்டகம் பண்ணப் பட்டவர்கள் வம்சமும் போகக் கடவது

சிவமயம் அர்த்தபாகம் துணை

நல்லபுள்ளியம்மன் துணை

சுப்ரமணியர் துணை

காமாட்சியம்மன் துணை

காரி விநாயகர் துணையிருந்து ரட்சிப்பார்

அனைவர் சொல்படிக்கு எழுதிய எடப்பாடி ராமசாமிப் பத்தன் செய்தது

(பட்டயம் முற்றிற்று.)

# ஆய்வுரை

## 1. பெயர்

இதில் மோரூர்க் காங்கேயர் பற்றி செய்தி வருவதால் இதனய் மோரூர்க் காங்கேயர் ஏடு என்று குறிப்பிடுகின்றோம். இது பட்டய மாகக் கிடைக்கவில்லய். பிரதி செய்யப்பட்ட நகலாகத்தான். கிடைத்தது. அதனால் 'ஏடு' எனப்பட்டது.

## 2. இடம்

இதனயப் பிரதி செய்து அளித்தவர் மல்லமமுத்திரம் ஊமையாம் பட்டி கவிஞர் ந. கந்தசாமி ஆவார். இவர் பல நூல்களய் ஓலயி லிருந்துபடித்து பதிப்பு செய்துள்ளார். திருச்செங்கோட்டுப் பள்ளு அவற்றுள் ஒன்றாகும். வயது முதிர்ந்த நிலயிலும், பல சுவடிகளய்த் தேடித் தொகுத்து பதிப்பிடத் தயாராக வைத்துள்ளார்கள். அரசாங்கத்தாரால் ஓலய் தேடவும் பதிப்பிக்கவும் ஏராளமான பணம் ஒதுக்கப் பட்டுள்ளதாக அறிவிப்புகள் வந்து கொண்டேயிருக்கின்றன. இவரய் யாரும் இன்னும் அணுகியதாகத் தெரிவில்லய்.

## 3. காலம்

இப்பட்டயத்தின் காலம் தெரியவில்லய். இரண்டு தேதிகள் இதில் குறிப்பிடப் படுகின்றன.

1. துந்துபி வருடம், ஆவணி மாதம், இருபத்தி ஐந்தாம் தோதி திங்கட்கிழமை சப்தமி திருவோண நட்சத்திரம்.

2. ருத்ரோத்காரி வருடம், புரட்டாசி மாதம், சனிக்கிழமை பதினய்ந்தாம் தேதி சனிக்கிழமை மாளிகைபிச்சம் உத்தர நட்சத்திரம்.

எல். டி. சாமிக்கண்ணு பிள்ளய் அவர்களின் இந்தியன் எபிமரிஸ் என்ற நூலிலிருந்து சரியான கி. பி. ஆண்டய்க் கணக்கிடலாம். எங்

களிடம் அந்த நூலும் இல்லை. போதிய பயிற்சியும் இல்லை. எனவே சரியான ஆண்டைக் கூற இயலவில்லை. தோராயமாக 16அல்லது17 நூற்றாண்டுகளில் வைக்கலாம்.

## 4. காங்கேயர்

கொங்கு நாட்டு ஊர்த்தலைவர்களில் காங்கேயர் குறிப்பிடத் தக்கவர்களாவார்கள். திருச்செங்கோட்டை அடுத்துள்ள மோரூர் அவர்களது தலை நகரம். சிலப்பதிகாரந்திற்கு உரை செய்த அடியார்க்கு நல்லார் இவர்களால் ஆதரிக்கப்பட்டார், "தக்கை ராமயணம்" என்ற பெருங்காவியம் உருவாக உதவியவர்கள். இந்த நூல் இன்னும் அச்சாகவில்லை. திருச்செங்கோடு மலையிலும், நிலத்தம்பிரான் கோயிலிலும் பல திருப்பணிகள் செய்துள்ளார்.

## 5. முக்கியமான செய்தி

காங்கேயர் வமிசம் கண்ணன் குலத்தைச் சேர்ந்த வேளாளர்கள் ஆவர். அவர்களுள் ஒருவனுக்குப் பிள்ளையில்லாமல் போய்விட்டது. மோரூரிலுள்ள நல்லபுள்ளியம்மன் கோயிலில் அந்தணர்களைக் கொண்டு ஒரு யாகம் நடத்தினான். காங்கேயனுக்குப் பிள்ளை வரம் வேண்டுமென அம்மனை வேண்டி, தன்னுடைய தலையைத் தானே அரிந்து யாக குண்டத்திலிட, ஒரு செங்குந்தர் குல இளைஞன் முன் வந்தான். அந்த வீரத்தினைப் பாராட்டும் வகையில், கன்னிவாடியில் இடங்கைச் சாதியாருக்கு அளித்த உரிமைகளைப் போன்ற பல உரிமைகள் வழங்க உத்தரவிடுகின்றார்.

பட்டயத்தின் வாசகம் தெளிவாக இல்லை, அதனால் பல செய்திகள் வரையறுத்துச் செல்ல முடியாமலிருக்கின்றன. 60 காங்கேயர் என்பது குடிப்பெயர். பட்டமுத்து, நல்லய்யன், குமார நல்லய்யன் போன்ற பெயர்கள் வருகின்றது. எந்தப் பெயர் யாருடைது என்று உறுதியாகக் கூற முடியவில்லை.

## முடி சூடுதல்

முடி சூடும் வைபவம் கூறப்படுகிறது. திருச் செங்கோடு மலை மேல், கோயில் மதிலுக்கு மேற்கே ஒரு சிறிய கோயில் உள்ளது.

இதுவே முருகாவுடையார் கோயில் ஆகும், இக் கோயிலின் இரும்பு முக்காலியில் அமரச் செய்து, செய்யும் சடங்கு ஆசாரம் செய்தல் என்று பெயர். இன்றும் கொங்கு நாட்டில் ஒரு சில குடிகளில் ஆசாரம் செய்யும் வழக்கம் இருந்து வருகின்றது. ஆசாரம் செய்து முடித்த பின் பனிரண்டு கட்டு விறகு எரியவிட்டு, அதன் மேல் இருத்தி குருக்கள்மார் ஆறுபேரும் அபிசேகம் பண்ணி அட்சதை போடுவதாகச் சொல்லப்படுகிறது.

**7. எழுகரை நாடு**

கொங்கு நாடு 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்ததை அறிவோம். ஏழுகரை நாடு என்பது மேற்கண்டவற்றில் ஒரு சில நாடுகள் அடங்கியதாகும். ஏழுநதிகள் பாயும் பகுதி ஆகும்.

**ஏழு ஆறுகளாவன**

1. காவிரி
2. பவானி
3. திருமணி முத்தாறு
4. அழகு முரிச்சான்
5. தொப்பையாறு
6. அமராவதி
7. நொய்யல்

ஏழுகரை நாட்டைச் சேர்ந்த நாடுகளாவன:

1. பூந்துறை நாடு
2. பூவாணிய நாடு
3. வஞ்சி நாடு (கரூர்ப் பகுதி)
4. சேல நாடு
5. இராசிபுர நாடு
6. பருத்திப் பள்ளி நாடு
7. ஏழூர் நாடு
8. வாழவந்தி நாடு
9. அரைய நாடு (கொடுமுடி, திருச்செங்கோடு பகுதிகள்)

**8. பட்டயம் வெட்டியவர்**

எடப்பாடி ராமசாமிப் பத்தன் என்ற கொல்லர் இதனை வெட்டியுள்ளார்

**9. வேண்டுகோள்**

இப்பட்டயத்தின் நகல் யாரிடமேனும் இருந்தால் ஒப்பிட்டுக் காண வசதியாக இருக்கும்,

# கிருஷ்ணராஜ உடையார் பட்டயம்

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1656 மேல் செல்லா நின்ற ஆனந்த வருஷம் தை மாதம் இரண்டாந்தேதி ஸ்ரீமத் ஆத்திரேய கோத்திரம் மைசூர் சிங்காசனாதீசுர மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் ஐயனவர்கள் தர்மமாக முள்வாய் சூழ்ந்த சங்ககிரி துர்க்காதிபத்தியம் ராஜ ஸ்ரீ சஞ்சி வேட்டத்து ராஜாவையனவர்கள் அப்பணைபடிக்கு காணிக்காரர் சம்மதப் படிக்கு கீழ்கரைப் பூந்துறை நாட்டில் மோரூர், தகடப்பாடி மணலி ஆனங்கூர் குமரமங்கலம் படைவீடு கூத்தம்பூண்டி கத்தாரி சித்தளந்தூர் பள்ளிபாளையம் இருப்புலி காவல்குறிச்சி கருமாபுரம் மோடமங்கலம் வட்டூர் தேவணாங்குறிச்சி திருமங் கலம் சமயசங்கிலி ஆகக் கிராமம் பதினெட்டும் இதைச் சேர்ந்த அக்கிரகாரம் இந்தக் கிராமங்களிலே இருக்கிற நாட்டு கவுண்டர்கள் காணியாளக் கவுண்டர்கள் பின்னும், இருக்கிற கவுண்டர்கள் குடியானவர்கள் தலத்துக் கணக்குப் பிள்ளைகள் ஓபளி பார்பத்தியக்காரர்கள் சேனபாகர் சகலருங்கூடி சம்மதித்சு திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுவர சுவாமியாருக்கும் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியாருக்கும் திருக்கார்த்திகை திருநாளுக்கும் உச்சிக் காலக் கட்டளைப் படித்தர தீபாராதனைகட்டும் கிராமம் ஒன்னுக்கு ஆறு பொன்னும் அஞ்சு பணமுமாக வருஷப் பிரதியாகத் தப்பாமல் கொடுத்து நடத்திக் கொண்டு வருகின்றோமென்க சகலரும் சம்மதிச்சு எழுதிக் கொடுத்த தாம்பிர சாசனம் இந்தத் தர்மம் சந்திராதித்தர் உள்ள வரைக்கும் புத்திர பௌத்திர பாரம்பரியமாக நடத்திவருவோமாகவும் இந்தத் தர்மத்தை தா மொருவர் பரிபாலனம் பண்ணி நடத்திவிச்ச பேர்களுக்கு சுவாமியார் அர்த்தபாக தரிசனையும் அஷ்ட ஐசுவரியமும் கொடுத்து ரட்சிப்பார் இந்த தர்மத்துக்கு விகாதம் நினைச்ச பேர் கங்கைக் கரையிலே கோகத்தி பண்ணிண தோஷத்திலே போவார்கள் அதுவறிந்த தர்மத்தைப் பரிபாலனம் பண்ணிண பேர்கள் சுவாமியார் கிருபை பெற்று சுகமாய் இருப்பார்கள் செங்கோட்டர் துணை இந்த சாசனம் குருக்கள்மார் வசம் கொடுத்தோம் சிவராம ஆசாரி கையெழுத்து.

## ஆய்வுக் குறிப்பு :

### 1. முத்துச்சாமிக் கோனார்

திருச் செங்கோட்டை நினய்த்ததும், புலவர்களுக்கும் ஆராய்ச்சி யாளர்களுக்கும் நினய்வில் வரும் பெயர் முத்துசாமிக் கோனார் ஆகும். பல ஏட்டுச் சுவடிகளிலிருந்த செய்திகளய்ப் பதிப்பித்துள் ளார். புதிய நூல்கள் பல யாத்துள்ளார். கொங்கு நாடு பற்றி விரி வான ஆராய்ச்சிகள் செய்துள்ளார். விவேக திவாகரன்' என்ற பெய ரில் பத்திரிகை நடத்தியுள்ளார். அவர் படித்து வெளியிட்ட செய்தி கள் பல உள்ளன. அவற்றில் ஒன்று இப்பட்டயமாகும்.

### 2. காலம்

சாலிவாகன சகாப்தம் 1656 இல் மேற்கொண்ட ஒப்பந்தம் பற்றி யது, கி பி. 1734 ஆம் ஆண்டு திருசெங்கோட்டைச் சுற்றியுள்ள 18 ஊர்களின் மக்கள் அனய்வரும் கூடி எடுக்கின்ற தீர்மானம் பட்டயமாக எழுதப்படுகின்றது.

### 3. பணி

திருச்செங்கோட்டில் அருள்மிகு அர்த்தநாரீசுரருக்கும், வேலவ ருக்கும், கார்த்திகைத் திருநாளுக்காகவும், உச்சிகாலப் பூசைக்காக வும் ஒவ்வொரு கிராமமும் ஆண்டு தோறும் ஆறு பொன்னும், ஐந்து பணமும் கொடுப்பதென தீர்மானிக்கின்றனர். ஊரிலிருக்கும் அத்த னய் மக்களும் சேர்ந்து இந்த முடிவினய் மேற்கொள்வது குறிப்பிடத் தக்கது.

### 4. எழுதியவர்

பட்டயத்தைச் செம்பில் வெட்டியவர் சிவராம ஆசாரி என்பவர். பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு பட்டயம் கோயில் குருக்கள்மார் வசம் சேர்க்கப்படுகிறது.

### 5. ஆளுநர்

மைசூர் மன்னர்களின் ஆட்சி வழங்கி வந்துள்ளது. அப்போது பட்டத்திலிருந்தவர் கிருஷ்ணராஜ உடையார். சங்ககிரி துர்க்கத்தின் அதிகாரியாக இருந்தவர் 'ராஜஸ்ரீ சஞ்சி வேட்டத்து ராஜா' எனச் சுட்டப்படுகிறார். 'முள்வாய் சூழ்ந்த சங்ககிரி துருக்கம்' என்று கூறுவது மரபாக உள்ளது. பல பட்டயங்களில் இதனய்க் காண் கின்றோம்.

# இராசகேசரிவர்மன்

# பட்டயம்

**மூல பாடம்**

**எஸ். ஐ. ஐ. தொகுதி 3 பகுதி 4 எண் 213**

ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜகேஸரி பன்மர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு அஞ்சாவது இவ்வாண்டு கொல்லி மழவன் ஒற்றியூரன் பிரதிகண்ட வர்வனேன்

என்னாட்டுத் தூசியூர்த் தென்புலத்து நிலம் கிழக்கெல்லை பிடாரியூர் நிலத்துக்கும் அமைச்சிக்கும் பூநாற்றி அணைக்கும் மேற்கும் தெற்கெல்லை திருப்பாறைக்குக் கிழக்குக் கன்னாட்டுக்கும் பெருவரம்புக்கும் வடக்கும் திருப்பாறைக்கு மேக்கும் கன்னாட்டுக்கும் பெருவரம்புக்கும் வடக்கும் மேக்கெல்லை சூளை குளமான காந்தளேரிக்குந் தான்றோன்றிப் பிரான் கோயிலுந் தூசியூர் தென்வாய் வாயிலினின்று தெற்கு நோக்கிப் போன பெருவழிக்கும் கிழக்கும் வடக்கெல்லை தூசியூர்ப் பழவூர்க்குத் தெற்கும்

தாமரைக் குளமும் இக்குளத்தால் நீர்க்கோவையும் இதடு பிவிரன் பூமியும்

கற்றளியேரியான புதுக்குளமும் இக்குளத்து நீர்க்கோவையும் இக்குளக் கீழெல்லையாவது கிழக்கெல்லை கன்னாட்டுக்கு மேக்குந் தெற்கெல்லை கட்டிநாகன் கூவலிட்டேரிக்கு வடக்கு மேக்கெல்லை மூக்குறுகாவிற்கு கிழக்கும் வடக்கெல்லை ஏரிக்குந்தெற்கு

கணவதி நல்லூரரான அமண்குடியும் அவ்வூர் நன்புலமும் செம்புலமும் இவ்விசைந்த பெருநான் கெல்லையினிலம், மேனோக்கின மரமும் கீழ் நோக்கின கிணறும் புற்று முடக்குறையும் உடும்போடியாமை தவழ்ந்ததுளெப்பேர்ப்பட்ட நிலமும்

தே.—4

தூசியூர்த் திருக்கற்றளி திருமூலட்டான முடைய பரமேஸ்வரர்க்கு உதகபூர்வ்வஞ் செய்து எல்லையுங் கல்லுந் தெரித்துக் குடுத்தேன் கொல்லிமழவன் ஒற்றியூரன் பிரதிகண்டவர்மனேன்

கணவதி நல்லூரான அமண்குடி தூசியூர் திருமூலட்டானம் உடைய பரமேஸ்வரர்க்கு உதகபூர்வ்வகம் செய்து குடுத்தேன் ஒற்றியூரன் பிரதிகண்ட பன்மனேன்

தூசியூர்த் திருமூலட்டான முடைய பரமேஸ்வரருந் தமக்கு பஞ்சமாசப்தம் கொட்டுகின்ற உவச்சர்களுக்கு கணபதி நல்லூரான அமண்குடி உதகபூர்வஞ் செய்து குடுத்தேன், திருக்கற்றளி உடைய பரமேஸ்வரர்க்கு.

இதனை இரட்சிப்பான் ஸ்ரீபாதமென் தலை மேலென. இதற்கினான் வழியெச்ச மொழியாம லறுவான்.

கொல்லிமழவன் ஒற்றியூரன் பிரதிகண்ட வன்மனேன் தூசியூர் மதவநிலம் பழந்தேவதானம் சூளைக்குளமான காந்தளேரிக் குளத்தின் கீழ் திருப்பாறைக்குத் தெற்க்கு பிரமதேயம் செய்தமையில் அந்நிலத்துக்கு நிலம் கழாறு.

இதுக்கு எல்லை சிறுகரைக்கு மேக்கு பள்ளிச்சந்தத்துக்கு வடக்கும் அமச்சிக்கு கிழக்கும் கல்லோடணைக்கு வடக்கு குசவன் கழனிக்கும் தெற்க்கும் இந்நான்கு எல்லை நிலம். நிலத்துக்கு நிலம் கொடுத்தேன்.

### எஸ். ஐ. ஐ. தொகுதி 3 பகுதி 4 எண் 212

ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜகேசரி பன்மற்கு யாண்டு 10 ஆவது மழவரையன் சுந்தரசோழனேன் தூசியூர் நகரத்தாரை நாங்கொள்ளும் மிறை முழுமனை காலும் அரைமனை அரைக்காலும் நின்ற இறை ஆகக் கொள் வதாகவும். தண்டம் குற்றமுள்ளது நந்தியுரமற் சாதி கொள்வதாகவும்.

இதன்றென்றான் ஸுகித சந்தானம் துப்பன வறுவான் இது ரட்சித்தானடி என் தலை மேலது.

ஸ்வஸ்திஸ்ரீகொல்லிமழவன் பிரதிகண்டன் சுந்தர சோழனேன்

எங்களாச்ச ரீழத்துப்பட அவர் ஸ்ரீ மதாஹத்துக்குச் சிறுபாடு கல்லோடு குழிக்குத் தென்மேற்க்கு தூசியூர்த் திருக்கற்றளி மரமேஸ்மரர்க்கு செ(ய்)து குடுத்தேன் பிரதிகண்டன் சுந்தர சோழனேன்.

## ஆய்வுக் குறிப்பு

### 1. பெயர்

இப்பட்டயங்கள் "திருச்செங்கோட்டுப் பட்டயங்கள்" என்று சுட்டப்படுகின்றன. திருச்செங்கோட்டில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் திருச்செங்கோடு பற்றிய செய்திகள் ஏதுமில்லை. எனினும் நாமக்கல் வட்டத்தில் தூசூர் ஏரி என்ற ஏரி உள்ளது. அந்த ஏரிக்கரையில் அமைந்துள்ள கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்களைப்பற்றி இதன் மூலம் அறிகின்றோம்.

### 2. காலம்

திருச்செங்கோடு ஆய்வுக் களஞ்சியம் முதல் தொகுதியில் இவற்றைப் முதலாம் இராசராச சோழனின் பட்டயங்கள் எனக் கூறியிருந்தோம். இராசகேசரி என்ற பட்டப்பெயரை வைத்தும், அவன் காலத்தில் நடைபெற்ற ஈடித்துப் போரை எண்ணியும் அவ்வாறு பல ஆராய்ச்சியாளர்கள் கருதிவந்தனர். அதில் ஒரு மாறுதல் தென்படுகின்றது. இப்பட்டயத்தை வ்ழங்கிய தலைவன் 'மழவரையன் சுந்தர சோழனேன்' என்றும் "பிரதிகண்டன் சுந்தர சோழனேன்" என்றும் "கொல்லிமழவன் பிரதிகண்டன் சுந்தரசோழனேன்" என்றும் கூறிக்கொள்கின்றான். அக்கால அதிகாரிகள் தம் பெயரின் பின்னொட்டாகத் தனது பேரரசரின் பெயரை சேர்த்துக் கொள்ளுவது வழக்கமாக இருந்தது. இந்த வழக்கத்தை ஒட்டி சோழப் பேரரசர்களில் புகழ்பெற்ற இராசராசனின் தந்தையான சுந்தர சோழன் அக்காலப் பேரரசராக இருக்கலாம், தலைவனது பெயர் பிரதிகண்டன் எனக் கொள்ளலாம். கொல்லி மலையைச் சேர்ந்த மழவர் குலத்தவர் எனக் கொள்ளலாம்.

சுந்தரசோழனின் ஆட்சியாண்டு கி.பி. 957 முதல் 970 வரை ஆகும். இவனும் இராசகேசரிப் பட்டம் கொண்டவன், எனவே இப்பட்டயத்தின் காலம் 961 என்றும் 966 எனக் கொள்ளலாம்.

### 3. ஈழத்துப்போர்

பிரதிகண்டவர்மனின் தந்தையின் காலத்தில் இலங்கையில் ஒரு போர் நடந்திருக்க வேண்டும். அதில் அவர் வீரமரணம் எய்திவிட்டார். அவருக்காக ஒரு நடுகல் தூசியூரில் எடுக்கப்

பட்டுள்ளதை அறிகின்றோம். அதன் தென்மேற்கே பரமேசுபரருக்கு ஒரு கருங்கல் ஆலயம் கட்டிக் கொடுத்துள்ளான்.

## 4. கொடை

திருமூலட்டான முடைய பரமேசுவரர் பூசைக்காக நிலமும் தாமரைக்குளமும், புதுக்குளமும், தானமாக அளிக்கப்படுகின்றன. அவற்றின் நான்கு எல்லைகளும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 5. அமண்குடி, கணவதி நல்லூர்

தூசூரின் அக்காலப் பெயர் கணவதி நல்லூர், அங்கு சமணர்கள் வாழ்ந்துள்ளார்கள். அதனால், அதற்கு அமண்குடி என்ற பெயர் இருந்துள்ளது. சங்ககாலத்திலிருந்தே திருச்செங்கோட்டில் சமணர்கள் வாழ்ந்திருந்ததற்கான சான்றுகள் உள்ளன. தொடர்ந்து பலகாலம் வாழ்ந்துள்ளனர். பருத்திப்பள்ளி மிகப் பெரிய சமணத் தலமாக இருந்துள்ளது. இதனைப் பொதுவாக கொங்கு நாட்டிற்குச் சொல்லலாம். பள்ளிச் சந்தம் என்பது சமணக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடை ஆகும். ஒரு நிலத்தின் நான்கெல்லைகளில் ஒன்று 'பள்ளிச் சந்தம்' என்று இருப்பதைக் காண்க.

## 6. நிலத்துக்கு நிலம்

பொதுமக்களிடமிருந்து எடுக்கப்பட்ட நிலத்திற்கு ஈடாகப் பணம் கொடுக்காமல் வேறு இடத்தில் நிலத்திற்கு நிலம் அளிக்கப் பட்டுள்ள செய்தியை அறிகின்றோம்.

## 7. ப மா சப்தம்

ஐந்து இசைக்கருவிகளைக் கொண்டு இசை எழுப்புகின்ற உவச்சர்களுக்கு நிலம் அளிக்கப் படுகின்றது. ஐந்து வாத்தியக் கருவிகளின் இசையைப் 'பஞ்சமா சப்தம்' என்ற சொல்லால் குறிக் கப்படுகின்றது.

## 8. இட்டேரி, பெருவழி

இட்டேரி என்பது அகலக் குறைவான காட்டுப்பாதை பெரும் பாலும் மழைகாலத்தில் நீரோடும் காலாகவும் மழைநின்றபின்

வண்டித் தடமாகவும் பயன்படும். பெருவழி என்பது அரசர்களால் நன்கு செப்பமாக அமைக்கப் பட்ட சாலைகளாகும். பெரும்பாலும் பெருநகரங்களையும் நாடுகளையும் இணைக்கும் பாதையாகும். அண்மைக் காலத்தில் பல பெருவழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தூசூர்ப் பகுதியில் ஆராய்ந்து இந்தப் பெருவழியையும் கண்டு பிடித்தல் அவசியம். அநேகமாக மதுரையையும் தஞ்சையையும் இணைக்கும் பெருவழியாக இருக்கலாம். இட்டேரியின் பெயர் 'கட்டிநாகன் கூவல் இட்டேரி' என்பதாகும்.

## 9. உடும்பும் ஆமையும்

நிலங்களை வர்ணிக்கும்போது "உடும்போடி ஆமை தவழும் எப்பேர்பட்ட நிலம்" எனப் பட்டங்களில் எழுதுவது வழக்கம். கொங்கு நாட்டுப் பகுதிகளில் மேட்டாங்காட்டை, ஓணான் முட்டையிடாத காடு என்பர். உடும்போடி என்பதன் மூலம் நீர்வளமில்லாப் புஞ்சைக் காட்டைக் குறிக்கின்றனர். நீர்நிலைகள் நிறைந்துள்ள இடங்களில் மட்டுமே ஆமையைக் காண முடியும். எனவே ஆமை தவழும் இடம் தஞ்சையைக் குறிக்கும் புஞ்சை, நஞ்சை என்பதனை இவ்வாறு குறிக்கின்றனர். 'நன்புலம், செம்புலம்' என்றும் நிலவகை இப் பட்டயத்தில் கூறப்படுகின்றது.

## 10. முழுமனை, அரைமனை

212 ஆம் எண்ணுள்ள பட்டயத்தில் 'முழுமனை காலும்' அரைமனை அரைக்காலும்' என்ற சொற்றொடர் பரப்பளவைக் குறிக்கலாம் என்று தோன்றுகின்றது. ஒரு மனையின் நீளம், அகலம் தெரியவில்லை.

## 11. மழவர்

மழவர் குடியினர் கொல்லிமலை, நாமக்கல் வட்டாரங்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். மோகனூருக்கு அடுத்துள்ள ஆரியூர் என்னும் சிற்றூர் மந்தையில் ஒரு நடுகல் உள்ளது. 'மழவராங்கல்' என அழைக்கப் படுகிறது. இக்கல்லில் எழுத்தில்லை, 'மழவராயன் கல்' என்பது திருந்தி மழவராங்கல் என்றாயிற்று. கொங்கு நாட்டின் ஒருபகுதி மழகொங்கம் எனப்படுகிறது. வேள்விக்குடிச் செப்பேட்டில் தேர்மாறன் என்ற பாண்டியன் மழகொங்கம் வெற்றிகொண்டதாகக் கூறப்படுகிறது. கிழகொங்கம் என்பதே

மழகொங்கம் எனச் சில ஆய்வாளர் கூறியதுண்டு, எனினும் மழ கொங்கத்தை அடிப்படுத்திய பின் காவிரியைக் கடந்து கொடுமுடி வந்துசேருவதாக அப்பட்டயம் கூறுகிறது. எனவே மழகொங்கம் என்பது நாமக்கல் வட்டாரமாக இருக்கலாமென்று கருத இட முள்ளது.

## 12. நீர் நிலைகள்

பூநாற்றி அணை, சூளைக் குளமான காந்தளேரி, தாமரைக் குளம், கற்றளியேரியான புதுக்குளம், கிணறு, முதலான சொற்கள் நீர்நிலைகளோடு தொடர்புடையன. பாசனவளம் மிக்க செழிப் பான நிலம் இருந்தமை கண்கூடு. தாமரைக் குளமும், காந்த ளேரியும் பழையவை. கற்றளி (கற்கோயில்) எடுத்தபோது வெட்டப் பட்டது புதுக் குளம் என்றாயிற்று. தூசூர் ஏரியும், கோயிலும் இன்றும் உள்ளன.

## 13. மூலட்டானம்

'தூசியூர் மூலட்டான முடைய பரமேசுவரர்' என்ற சொற் றொடர் வருகின்றது. திரும்பத்திரும்பச் சில இடங்களில் வருகின்றது. மூலஸ்தானத்தில் உள்ள பரமேசுவரர் - அதாவது கருவறையில் உள்ள பரமேசுவரர் என்பது மேற்போக்கான பொருளாகத் தெரி கின்றது. எனினும் உட்பொருள் ஏதேனும் இருக்கலாம் என்று தோன்றுகின்றது.

## 14. கழாறு

கழாறு என்ற சொல் வழங்கப்படுகின்றது. நிலவிற்பனைகளை 'கருர் எழுதுதல்' என்று சொல்வது தற்போதைய வழக்கம். இதே பொருளில் கழாறு இப்பட்டயத்தில் ஆளப்படுகிறது. கருர் என்பது கழாறு என்பதன் திரியாக எடுத்துக் கொள்ளலாம். கருர் என்பது உருதுச் சொல்லாக இருக்கலாம் என்ற கருத்து இங்கே மறுபரி சீலனைக் குள்ளாகின்றது.

## 15. பெருவரம்பு

வரப்பு என்று தற்போது வழங்கப்படும் சொல்லே இங்கு வரம்பு என வந்துள்ளதாக எடுத்துக் கொள்ளலாம். பெருவரம்பு என்பது பெரிய வரப்பு என்று பொருள்படும். இந்த வரப்பைத் தேடிக் காணல் அவசியம்.

## 16. கன்னாட்டு

பிரதிகண்டவர்களின் தந்தை ஈழத்தில் நடந்த போரில் இறந்து போனதாகத் தெரிகின்றது. இந்தப் போர் பற்றிய செய்தி ஏதும் தெரிய வில்லை, இது பெரும் போராக அல்லாமல் சிறு பூசலாகக் கூட இருக்கக் கூடும். அவருக்கு தூசியூரின் கல் நடப் பட்டுள்ளது. இந்த நடுகல்லையும் தேடவேண்டும். கல் + நாட்டு = கன்னாட்டு இந்த நடுகல் ஒரு எல்லையாகச் சொல்லப்படுகிறது

## 17. ஒற்றியூர்

பிரதிகண்டவர்மன் "ஒற்றியூரன்" என்று குறிப்பிடப் படு கின்றான். "ஒற்றயூர்" கொங்கு நாட்டில்தான் எங்காவது இருக்கவேண்டும்.

## 18. இராவ்பகதூர் H. கிருஷ்ண சாஸ்திரி

இப்பட்டயத்தைப் படித்து ஆராய்ந்தவர் இவர்தான். அவர் காலத்தில் தூசூர் எது என்று தெரியவில்லை. நாமக்கல் லிருந்து துறையூர் செல்லும் சாலையில் அமைந்துள்ள தூசூரே அக்காலத் தூசியூர் ஆகும். தூசூரில் உள்ள பெரிய ஏரி தற்போது பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ளது.

## 19. முத்துசாமி கோனார்

இப்பட்டயங்கள் திரு முத்துச்சாமிக் கோனார் வசம் இருந்து வாங்கியதாக் தெரிகின்றது.

# முடிப்புரை

திருச்செங்கோடு தொன்று தொட்டு பழமைச் சிறப்பும் புதுமைப் பொலிவும் கொண்ட நகரமாகத் திகழ்கின்றது. அதன் வரலாற்றை முழுமையாக அறிவது மிகவும் இன்றியமையாதது. திருச்செங்கோட்டைச் சுற்றிலும் வரலாற்றுச் செய்திகள் நிறைந்த பருத்திப்பள்ளி போன்ற பல ஊர்கள் உங்ளன. அந்தச் செய்திகளும் தொகுக்கப் படவேண்டும். மோரூர் ஒரு தலைநகரமாகத் திகழ்ந்துள்ளது. அங்கு வாழ்ந்த காங்கேயர் மரபும் இன்னும் ஆராயப்பட வேண்டும். குமரமங்கலம், கோழிக்கால் நத்தம் போன்ற இடங்களில் பல ஈமக்கல் வட்டங்கள் உள்ளன. அறிவியல் முறைப்படி அகல்வாரய்ச்சி செய்து C14 முறையில் கால நிர்ணயம் செய்தல் வேண்டும். திருச்செங்கோடு மலைமீது ஒரு கோட்டை கட்டும் முயற்சி நடைபெற்றுள்ளது. அது பற்றிய விவரங்கள் ஏதும் தற்போது அறிய முடியவில்லை, திருச்செங்கோடு வட்டாரத்தில் பண்டைய தமிழி எழுத்தாலான கல்வெட்டுகள் கட்டாயம் இருந்திருக்க வேண்டுமென உள்ளுணர்வு கூறுகின்றது. அவற்றைத் தேடுதல் நலம் தரும்.

